
# திருவாரூர்த் தல வரலாறு







வெளியீடு:

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி தேவஸ்தானம்

திருவாரூர்

# திருவாரூர்த் தல வரலாறு

TIRUVARURT TALA VARALARU

எழுதியவர் :

**வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்**

26 APR 1970
MADRAS

வெளியீடு :

**ஸ்ரீ தியாகராஜஸ்வாமி தேவஸ்தானம்,**

**திருவாரூர்.**

| | |
|---|---|
| முதற் பதிப்பு | 1948 |
| இரண்டாம் பதிப்பு | 1955 |
| மூன்றும் பதிப்பு | 1958 |
| நான்காம் பதிப்பு | 1963 |
| ஐந்தாம் பதிப்பு | 1969 |

காவேரி கலர் பிரஸ், கும்பகோணம்.



குறைவி லாநிறை வேகுணக் குன்றே
கூத்தனேகுழைக் காது (உ) டையானே
உறவி லேன்உனை யன்றி மற்(று)அடியேன்
ஒருபிழைபொறுத் தால்இழி வுண்டே
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேயெனை அஞ்சலென்(று) அருளாய்
யார்எனக்கு (உ)ற(வு) அமரர்கள் ஏறே.

சிவமயம்

# முகவுரை

பிறக்க முத்தி தரும் திருவாரூர், பூமிதேவிக்கு இதய கமலமாய்த் திகழ்வது. விராட்புருடனுக்கு மூலாதாரத் தலமாய் விளங்குவது. புற்றிடங்கொண்ட புராதனையும் அஜபா நடனமாடும் ஆனந்தத்தியாகராஜனையும் மூர்த்திகளாகக் கொண்டுள்ளது. கமலாலயம் என்னும் தீர்த்தத்தினையுடையது. சைவசமயகுரவர் நால்வராலும் பாடப்பெற்றது.

பல வழிகளிலும் சிறந்து விளங்கும் இத்தலத்தின் வரலாறு செய்யுள் வடிவில் சம்பந்த முனிவரால் பாடப் பெற்றுள்ளது. தலயாத்திரைக்கு வரும் பக்தகோடிகள் இத்தலத்தின் பெருமைகளைச் சுருக்கமாக எளிதில் உணர வேண்டும் என்ற நோக்கம் பற்றி 1948-ம் ஆண்டில் நிர்வாக அதிகாரியாக இருந்த எ எம். பாண்டியம் பிள்ளை அவர்கள், வித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்களைக்கொண்டு இவ் வரலாற்று நூலினை வெளியிட்டார்கள்.

இந்நூல் பக்தகோடிகளுக்கு அதிகம் பயன்படுவதை உணர்ந்து 1955-ம் ஆண்டில் நிர்வாக அதிகாரியாக இருந்த திரு. P. S. வேணுகோபால நாயுடு அவர்கள் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார்கள். 1958-ம் ஆண்டில் நிர்வாக அதிகாரியாக இருந்த திரு. N. ராஜ கோபாலன் அவர்கள் இதன் மூன்றும் பதிப்பை வெளியிட்டார்கள். 1963-ம் ஆண்டில் நிர்வாக அதிகாரியாக இருந்த திரு. A. கோபால்சாமி உடையார் அவர்களால் இதன் நான்காம் பதிப்பு வெளியாயிற்று.

பெருமளவில் இத்தலத்திற்கு வழிபட வருவோர் இந்நூலினை விரும்பி ஏற்றுப் படித்தின்புறுதலின், இதன் ஐந்தாம் பதிப்பு வெளியிடப்பெறுகிறது. சிவநேயச் செல்வர்கள் பெற்றுப் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

இரண்டாம் பதிப்பு முதல் பின்வந்த எல்லாப் பதிப்புகளையும் ஒப்புநோக்கிப் பிற்சேர்க்கையாக வழிபாட்டுப் பாடல்களையும் இணைத்து உதவிய புலவர்மணி வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகரவர்கட்கு எமது நன்றி.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி
தேவஸ்தானம்,
திருவாரூர். 1-10-69.

B. அருணசலம், B. A., B.L.,
நிர்வாக அதிகாரி.

# சத்த விடங்க ஸ்தலங்கள்

## தென்னாட்டில் ஸ்ரீ தியாகராஜப்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள தலங்கள் ஏழு.

*சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு*
*காரார் மறைக்காடு காராயில்—பேரான*
*ஒத்ததிரு வாய்மூர் உகந்ததிருக் கோளிலி*
*சத்தவி டங்கத் தலம்.*

| தலம் | *விடங்கர் பெயர் | * தியாகராஜரது நடனம் |
|---|---|---|
| 1. திருவாரூர் | வீதிவிடங்கர் | அஜபா நடனம் (திருமால் தனது மார்பில் தியாகராஜரை வைத்து வழிபடும் காலையில்; உள்மூச்சு வெளிமூச்சுக்களால் மார்பு ஏறி இறங்குவது போல மேலும் கீழுமாக ஆடுதல் அன்றியும் மூச்சு முன்னும் பின்னுமாக வந்து செல்வது போல் முன்னும் பின்னுமாக வந்து சென்று நடித்தல். இப்போது திருமால் இறைவன் திருநாமத்தினை வாயினால் ஜபிப்பதில்லை) |

| தலம் | * விடங்கர் பெயர் | * தியாகராஜரது நடனம் |
|---|---|---|
| 2. திருநள்ளாறு | நகவிடங்கர் | உன்மத்த நடனம் (பித்துக்கொண்டவன் ஆடுவது போல் ஆடுதல்) |
| 3. திருநாகைக் காரோணம் (நாகபட்டினம்) | சுந்தரவிடங்கர் | பராவாரதரங்க நடனம். (கடல் அலைபோல் ஆடுதல்) |
| 4. திருக்காராயில் | ஆதிவிடங்கர் | குக்குட நடனம் (கோழியைப் போல் ஆடுதல்) |
| 5. திருக்கோளிலி (திருக்குவளை) | அவனிவிடங்கர் | பிருங்க நடனம் (வண்டு மலருக்குள்ளே குடைந்து குடைந்து செல்வது போல் ஆடுதல்) |
| 6. திருவாய்மூர் | நீலவிடங்கர் | கமல நடனம் (தாமரை மலர் அசைவது போல் ஆடுதல்) |
| 7. திருமறைக்காடு (வேதாரண்யம்) | புவனிவிடங்கர் | ஹம்ஸபாத நடனம் (அன்னப்பறவை அடிவைத்து நடப்பது போல் ஆடுதல்) |

* இந்த நடனங்கள் நாட்டியக்கலையின் உயர்வைப் புலப்படுத்துகின்றன. நேரில் கண்டுகளிக்க வேண்டாமா?

பக்கம் 41. புராண வரலாறு பார்க்க: உண்மை உருவத்தை அளித்த இந்திரன் ஏனைய ஆறுதிருவுருவங்களையும் முசுகுந்தனுக்கே அளிக்க; அவையும் மேற்கண்ட திருவாரூரல்லாத ஆறு தலங்களிலும் ஸ்தாபிக்கப்பெற, சப்த விடங்க ஸ்தலம் என்ற வழக்கு நிலைபெறலாயிற்று.

* விடங்கர் உளியால் செய்யப்படாது தாமே தோன்றியவர். இந்த இலிங்கத்திருமேனி தியாகராஜருக்கு அருகே பெட்டகத்தில் காணப்பெறும்.

## இத்தலத்தில் தரிசிக்கவேண்டிய முக்கிய இடங்கள்:

(i) இந்தக்கோயிலுக்கு அண்மையிலேயே உள்ளவை:

1. திருவாரூர்ப் பூங்கோயில்
2. அறநெறி
3. பரவையுண் மண்டளி

(ii) சற்று தூரத்திற்கு அப்பாலுள்ளவை:

1. திருப்பள்ளியின் முக்கூடல்
2. திருவிளமர்

(iii) தீர்த்தம்:

கமலாலயம் 64 கட்டங்களும், பதினாறு கோடிகளும்.

(iv) மூர்த்திகள்:

1. நிறைசெல்வத் தியாகேசர்
2. வன்மீகநாதர்
3. சுந்தரர்பெருமான்-சேரமான்பெருமான்
4. விஷ்ணு மார்பில் விடங்கர்
5. மந்திரபீடம்
6. யமசண்டர், ஆதிசண்டர்
7. நீலோற்பலாம்பிகை { கந்தர் திருக்கரத்தைப் பிடித்துள்ள அருமை.
8. சித்தீஸ்வரம்—தக்ஷிணாமூர்த்தி
9. கமலாம்பாள்—(தவத்திருக்கோலம்)
10. அக்ஷரபீடம்

(v) இடங்கள்:

1. ராஜநாராயண மண்டபம்
2. அறநெறி மண்டபம் { செருத்துணையார் பூத்தொண்டும், நமிநந்தியடிகள் விளக்குத்தொண்டும்
3. தேவாசிரிய மண்டபம்
4. சபாபதி மண்டபம்

(vi) சித்திரம்—சிற்பம்:

1. ஆழித்தேர்
2. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றிலும் உள்ள சித்திரங்கள்
3. நீலோற்பலாம்பாள் முன்மண்டபச் சித்திரங்கள்
4. விசுவகர்மேசுவரம் கற்சிற்பம்
5. கீழராஜகோபுரம் கற்சிற்பம்
6. மேலைக்கோபுரம் சுதைச் சிற்பம்
7. தியாகராஜர் முன்மண்டபப் பித்தளைச்சிற்பம்



உ
சிவமயம்.

# திருவாரூர்த் தலவரலாறு.

'பொன்னு மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மானை யெளிவந்த பிரானை
அன்னம்வைகும் வயற் பழனத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே."



சுந்தரர்.

## முன்னுரை

**வே**ண்டுவார் வேண்டுவதை யீவதே இறைவன் இயல்பு. ஆனால் வேண்டியது இன்னது என்று நாம் அறிவது எப்படி? வேண்டியவைகளை அறிவித்து, நாம் வேண்ட, அவைகளையே ஈகின்றவன் இறைவன். ஆனால் செல்வத் தியாகரோ 'குறிப்பறிந்தீதலே கொடையாதலின்' ஆன்மாக்கள் வேண்டுவன எவை யென்பதைத் திருவுளத்துக்கொண்டு அறம், பொருள், இன்பம் என்கின்ற சதுர்வித புருஷார்த்தங்களைக் கொடுக்கிறார். மன்னர்

மன்னராயிருந்தும் பிழையைப் பொறுக்கின்ருர். பழம் பிழையை நீக்குகின்ருர். அத்தகைய பெருங் கருணைக் கடலும், கொடை வள்ளலுமாகிய அவர் எளிவந்து எழுந்தருளியிருப்பது திருவாரூர்த் திருநகர்.

இத்தலம் தென்ஞட்டிலுள்ள சிவதலங்கள் பலவற்றுள் தனிப்பெருமையுடையது. இம்மையினிவ்வுலக வின்பத்தையும், மறுமையில் வீட்டின்பத்தையும் அளிக்கவல்லது; பிறக்க முத்திதருவது; ஐம்பெரும் பூதத்தலங்களுள் பிருதுவித்தலமாக இருப்பது; விராட் புருஷனுக்கு மூலாதாரத்தலமாக இருப்பது; உலகிலுள்ள எல்லாச் சிவகலைகளும் சாயரக்ஷை எனப்படும் திருவந்திக்காப்பு நேரத்தில் ஒரு சேர விளங்கப் பெறுவது. ''ஒருவனய் உலகேத்தே நின்ற நாளோ'' ''நிலந்தரத்து நீண்டுருவம் ஆனநாளோ''. ''திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாள்'' என அப்பரடிகளால் பழைமையறிவிக்கப் பெறுவது. ''திருவாரூர்த் தேரழகு'' எனத் தேரழகு படைத்தது. சரித்திர உலகிற்குப் பேராரணகத் திகழ்வது. சித்திரம், சிற்பம் முதலிய கலைகளுக்கு உறைவிடமாக விளங்குவது. இத்தகைய திருத்தலம் மண்ணினிற் பிறந்தார் பெறும் பயனுக வழிபடத்தக்கது.

இவ்வாறு பெருஞ் சிறப்போடு விளங்குகின்ற திருவாரூர்த்தலம் சோழநாட்டிலே, தஞ்சை ஜில்லாவிலே, நாகபட்டினம் தாலூகாவில் உள்ளது. இது ஒரு முனிசிபல் நகராயுள்ள புகைவண்டிக் கூட்டு நிலையம் (ஜங்ஷன்). இங்கிருந்து மாயவரம், காரைக்குடி, தஞ்சாவூர், நாகபட்டினம் முதலிய இடங்களுக்குப் புகைவண்டிகள் செல்லுகின்றன. இத்தலம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒருமைல் தூரத்தில் இருக்கிறது. பஸ் வழியாக வருபவர்கள் தெற்கு, மேற்கு, வடக்கு வீதிகளிலேயே இறங்கலாம். இத்தலத்திற்கு வடக்கில் சுக்காறும், தெற்கில் ஓடம்போக்கியாறும் பேரழகு செய்கின்றன. மக்களுடைய சாதாரண வசதிக்கேற்ப குளங்கள் பலவுண்டு. அவைகளிற் பெரும்

பாலானவை சிவ தீர்த்தங்கள். இவையேயன்றிச் சிறு வாய்க் கால்களும் நகர்க்குள் குறுக்கே ஓடுகின்றன. இத்தலத்தின் வெப்ப நிலை 98°. இத்தலத்துச் சுமார் 27,250 மக்கள் வசிக்கின்றனர். இவர்களிற் பெரும்பாலோர் விவசாயிகளே. பல கிராமங்களுக்கு மத்தியில் போக்கு வரத்து வசதிகள் மிகுந்த இடமாயிருத்தலின் இது சிறந்த வியாபார ஸ்தலமுமாகும். நெல் வியாபாரமும் நெல்லரைக்கும் யந்திரத் தொழிலும் இங்கும் சுற்றுப் புறங்களிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. பெரிய மிராசுதார்களும் இருக்கின்றார்கள். இங்கே பாய் நெசவுத் தொழிலும் சிறந்த முறையில் நடைபெறுகின்றது. இவ்வூரில் கன்னாரத்தெரு, காகிதக்காரத்தெரு, நெட்டிவேலைக்காரத்தெரு முதலிய தெருக்கள் விளங்குவது பழங்காலத்தே இவ்வூர் சிறு கைத்தொழில்களில் சிறப்புற்றிருந்ததை உணர்த்துகின்றது. சிறிய இரும்புத் தொழிற்சாலைகளும் உண்டு. நெட்டி வேலைப்பாட்டில் சிறந்த மக்கள் இப்போதும் வசிக்கின்றனர். நெல்லரைக்கும் யந்திரங்களுக்கு வேண்டிய தனிப்பொருள்களும், உருட்டுப் பொம்மைகளும், இளைஞர் விளையாட்டுப் பொருள்களும் இங்கே மிகுதியாகச் செய்யப்பெறுகின்றன.

---

## இடவசதி

கோவிலுக்கு வடகிழக்கில் சுமார் 100 அடி தூரத்தில் நடைவாகனத் தெருவில் அன்னதானக் கட்டளைச் சத்திரம் இருக்கிறது. இங்கு தலயாத்திரைக்கு வருபவர்களுக்கு மத்தியானம் உணவளிக்கப்படுகிறது. தங்குவதற்கு இடவசதியும் செய்து கொடுக்கப்பெறும். இச்சத்திரத்தே சுமார் 100 பள்ளி மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்பெறுகின்றது. இந்தத் தருமங்கள் திருக்கோயில் சார்பிலேயே நடைபெறுகின்றன. பொது மக்களின் நலங்கருதி கிழக்குக் கோபுரத்தின் பக்கத்தில் ஒரு கலியாணமண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. வடக்கு வீதியில் ஸ்ரீசுந்தரமூர்த்தி

சுவாமிகளுக்குத் தனிமடம் ஒன்றுண்டு. துர்க்காலயா தெருவில் வடபாதிமங்கலம் சத்திரம் உண்டு. அதில் தல யாத்திரைக்கு வருபவர்களுக்கு மூன்று நாளைக்கு மட்டும் உணவு வசதியுண்டு. ஐம்பது பள்ளி மாணவர்கள் இலவச உணவு அருந்தி, இருந்து பயில்கின்றனர். கமலா லய தீர்த்தக்கரையின் வடபக்கத்தில் பச்சையப்ப முதலியார் சத்திரம் இருக்கிறது. அதில் தினந்தோறும் சில யாத்ரீகர் களுக்குப் படிஅரிசி கொடுக்கப்பெறுகிறது. மற்றும் நாடார் ஹால் முதலியன அவ்வச் சமூகத்தவர்கள் தங்குவதற்கேற் றன. மற்றும் குமரகோவில் சந்நிதியில் உள்ள குருபூஜை மடமும் திருமஞ்சன வீதியில் உள்ள நகர மடமும் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தங்கக்கூடிய இடங்கள் ஆகும். கன்னடிய மடம், மேளக்கார மடம் என்பன தெற்கு வீதியி லுள்ள தியாகராஜஸ்வாமி மடம், கந்தப்பச்செட்டி மடம் முத லியன தக்கவர்கள் தங்கக்கூடிய இடங்கள். சாதுக்கள் தங் குவதற்கு மடப்புரத்தில் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடமும், சோமநாத ஸ்வாமி மடமும் பெரிதும் பயன்பெறுகின்றன. ஏழைகள் தங்க ஆற்றங்கரையில் மூக்குச் செட்டி மண்டப மும், மடப்புரத்தில் திருவாசலும், நகர மடத்தின் வெளித் திண்ணைகளும் பெரிதும் பயன்பெற்று வருகின்றன. இவை யேயன்றிக் கமலாலயம் வடகரையில் உள்ள திருவாவடு துறை ஆதினத்தைச் சேர்ந்த மடமும், மேல் கரையில் பாலா யிக் கட்டளைச் சத்திரமும், தெற்குவீதியில் தருமபுர ஆதீனப் பார்வையில் உள்ள இராசாங்கக் கட்டளை மடமும் இருக் கின்றன.

தெற்குவீதி மேல் கோடியில் தஞ்சையரசருடைய பழைய அரண்மனை இருக்கிறது. இதனாலேயே அந்தக்கோ டிக்கு பெயர் ''அரண்மனைக் கோடி'' என வழங்குகிறது. விஜயபுரத்திலும், தெற்கு விதியிலும் உணவு விடுதிகளும், தங்குவதற்கேற்ற அறைகளும், மற்றும் குடிக்கூலிக்கு வீடு களும், அறைகளும் கிடைக்கும். ஊரின் மேல்கோடியில் அமைந்துள்ள மெய்ப்பொருள் நகரில் உயர்நிலைப் பள்ளியுடன்

மாணவர் இல்லம் ஒன்றும் நடைபெற்று வருகின்றது. இவ் வூரில் வ. சோ. ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும், பெண்களுக்கென திரு G. R. உயர்நிலைப் பள்ளி ஒன்றும், இருபாலரும் பயிலும் ஐந்து நடுநிலைப் பள்ளிகளும், பல தொடக்கப் பள்ளிகளும் உள்ளன.

## கோயில்

இத் திருக்கோயில் தென்னிந்தியாவிலுள்ள பெரிய கோவில்களில் ஒன்று. சரித்திரப் பழமை பெற்று விளங்குவது. சைவ சமய வரம்பாகத் திகழ்வது. மிகவும் உயர்ந்த நான்கு வெளித் திருமதில்களையுடையது. கிழக்கு மதிலின் நடுவில் ஒரு பெரிய கோபுரம் இருக்கின்றது. இது மிகப் பெரியது. இந்தத் தூலலிங்கமாகிய திருக்கோபுரமே சுமார் 10 மைல்களுக்கு அப்பாலிருந்துவரும் அன்பர்களுக்குக் காட்சி தந்து அழைத்து வன்மீகநாதர் திருவடிக்கு வழிகாட்டும். தெற்கு மதிலில் கிழக்குப்புறமாக இருப்பது தெற்குக் கோபுரம். இது சிறியது. மேற்குக் கோபுரம் அடிமுதல் முடிவரை சுதை வேலைப்பாடு செறிந்து விளங்குவது. இதில் யானையை யுரித்தது,சனகாதியர்களுத்கு உபதேசித்தது முதலிய நிகழ்ச்சிகளைக் காட்டும் திருவுருவங்களும், மகா சதாசிவமூர்த்தி முதலிய திருவுருவங்களும் காட்சி வழங்குகின்றன. மற்றைய கோபுரங்களைக் காட்டிலும் இதிலேயே சுதைச் சிற்பங்கள் மிகுதி. வடக்குக் கோபுரம் தெற்குக் கோபுரத்தைவிடப் பெரியது. இந்நான்கு கோபுரங்களோடு திருக்கோயிலின் வெளி மதிலின் ஈசானிய பாகத்தில் விட்ட வாயிற் கோபுரமும் இரண்டாம் பிரகாரத்தில் ஆரியன் கோபுரமும், வன்மீகநாதர் சந்நிதியிலுள்ள அழகியான் கோபுரமுமாக ஏழு கோபுரங்கள் உள்ளன. இத் திருக்கோயிலுக்கு உள்ளேயுள்ள மூன்று பிரகாரங்களும், மடவளாகமும், திருவீதியுஞ் சேர்ந்து ஐந்து பிரகாரங்கள் உள்ளன. சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்துத் திருக்கோயிலை நடுவாக வைத்துச் சூழ இருபத்தொரு வீதிகள் இருந்தன என்பதும், அவை திரு

வடிப்போதுநாறிய திருவீதி, பொன் பரப்பிய திருவீதி, குலோத்துங்கன் திருவீதி, ராஜராஜன் திருவீதி முதலியன வாகப் பெயர் வழங்கப் பெற்றன என்பதும் பழஞ்செய்திகள்.

இத் திருத்தலத்தின் எல்லையை அறிவிக்கின்ற பழம் பாடல் ஒன்று உள்ளது. அது :—

"ஆரூர் திருநகரின் அம்மைவன மேல்சரகம்
தேரூர் தண்டலையாம் தென்பாலே—சீரும்
மழவிடயார் புலிசேர் வலமாகுங் கீழ்பால்
பழவனமாம் ஊரெனவே பார்."

இக் கோயிலின் அகலம் தெற்கு வடக்கு 666 அடிகள். நீளம் கீழ்மேல் 846 அடிகள். பழைய நூல்களில் 'கோயில் ஐவேலி, குளம் ஐவேலி, செங்கழுநீர் ஓடை ஐவேலி என அதன் பரப்பு கூறப்பெற்றுள்ளது.

கோயிலின் பழமை :— இக் கோயில் முதன்முதலாகக் கட்டப்பெற்ற காலம் இன்னதென்று கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. "ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ" என்ற அப்பர் சுவாமிகளின் திருவாக்கை நோக்கும்பொழுது இதன் பழைமையை நாம் அறிகிறோம். இத்தலத்தின் புராண வரலாற்றை நோக்கும்போது வன்மீக நாதர் (புற்றிடங்கொண்டார்) சுயம்புவாகத் தோன்றி, தேவர்களுக்கு அருளி, திருமாலின் செருக்கடக்கினார் என்று அறிகின்றோம். இந்திரன் பூசித்த தியாகேசப் பெருமானை சரிதகால முன்னோனாகிய முசுகுந்த சோழன் தேவலோகத்தினின்றும் பெற்றுவந்து தாபித்தான் என்ற செய்தி இத்தலத்தில் ஸ்ரீ கமலவஸந்த தியாகப் பெருமான் எழுந்தருளியுள்ள பழமையை உணர்த்துகின்றது. அன்றுதொட்டே பூசிக்கப்பெற்று வருகின்ற விடங்கரின் திருவுருவமும் மிக மிகப் பழமை வாய்ந்த ஒன்றே.

---

இப் பாடல் ஏட்டுப் பிரதியின்கண் கண்டபிரகாரம் கொடுக்கப்பெற்றுள்ளது; திருத்தமான பாடம் கிடைத்து உதவினால் நன்றியறிவோடு அடுத்த பதிப்பில் பிரசுரிக்கப்பெறும்.

இத் தலத்தின் கிழக்கு வீதியில் உள்ள பரவையுள் மண்டளி என்ற கோயில் இக் கோயிலைப்போல மிகப் பழங்காலத்தே செங்கற்களாலாகிய ஒன்றாக இருந்திருக்க வேண்டும். சோழ நாட்டிலே கருங்கற் கோயில்கள் தோன்றிய காலம் கி. பி. 7-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர். கி. பி. 10-ம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட இராஜராஜ சோழன் தஞ்சையில் பெருவுடையார் கோயிலை இத் தலத்தின் கோயிலமைப்பைக் கண்டு, இதற்கு இணையாக அமைத்தான் என்று கூறப்படுவதால் இன்றுள்ள இத்தலத் தின் கற்கோயில் கி. பி. 7-ம் நூற்றாண்டிற்கும் 10-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தே சோழ வேந்தர் களால் அமைக்கப் பெற்றிருக்க வேண்டுமென்று ஒருவாறு கூறலாம்.

கிழக்குக் கோபுர வாயிலில் இடது பக்கம் விநாயகர் கோயிலும், வலது பக்கம் முருகன் கோயிலும் விளங்கு கின்றன. அவற்றை வழிபட்டு உள்ளே நுழைந்ததும் விநாயகர் சந்நிதியைக் காணலாம். அவர் திருப்பெயர் வீதிவிடங்க விநாயகர் என்பது. அவருக்குப் பின்னால் பிரமநந்தி எழுந்தருளியுள்ளார். இந் நந்தியம்பகவான் கண்கண்ட தெய்வமாக இருப்பது அறிந்தின்புறுதற்குரியது. மழை வேண்டின் இவரைச் சுற்றிலும் நீர் நிரப்பி வைத்தால் மழை பெய்கிறது. பசுக்கள் கறவாது உதைத்தால் இந் நந்திக்கு அறுகு சாத்தி அதைக் கொணர்ந்து பசுவுக்குக் கொடுத்தால் நன்றாகப் பால் கறக்கும். இந் நம்பிக்கையால் மக்கள் இன்றும் பயன்பெற்றுவருதல் கண்கூடு. அங்கிருந்து வலமாக வருவது பெரிய பிரகாரம். அப் பிரகாரத்தில் தெற்குக் கோபுரத்தின் அருகாமையில் பக்த காட்சி மண்டபமும், ஊஞ்சல் மண்டபமும் இருக்கின்றன. பக்த காட்சி மண்டபத்தில் தியாகராஜப் பெருமான் பங்குனி உத்தரத் திருவிழா முடித்து அருள் நடனம் செய்த வண்ணமாக அன்பர்களுக்குக் காட்சியளிப்பர். ஊஞ்சல்

மண்டபத்தில் மார்கழித் திருவாதிரைத் திருநாளில் சந்திரசேகரர் எழுந்தருளி ஊஞ்சலாட்டு உத்ஸவம் கொண்டருளுவர். இம் மண்டபங்களைக் கடந்து வலமாகச் சென்றால், தெற்குப் பிரகாரத்தில் பூந்தோட்டம் இருக்கக் காணலாம். பிரகாரத்தின் நடுவில் ஆகாச விநாயகர் சந்நிதியுள்ளது. மேற்குப் பிரகாரத்துத் தொடக்கத்தில் தென்கோடியில் துலாபார மண்டபமும், அதற்குச் சிறிது தூரத்தில் சரஸ்வதி தீர்த்தமும் உள்ளன. அதனையடுத்து ஒரு பெரிய மண்டபம் உள்ளது. அது சித்திர ஸபா மண்டபம் என்றும், சபாபதி மண்டபம் என்றும் வழங்கப் பெறும். பங்குனி உத்திர விழாவில் திருத்தேர் உத்தர பாதத்துக்குள் நிலைக்கு வந்து விட்டால் தியாகராஜப் பெருமான் அம் மண்டபத்திற்கு எழுந்தருளி உத்தர தீர்த்தம் வழங்குவர். உத்தர மகாபிஷேகமும் அங்கே நடைபெறும். இம் மண்டபம் நன்றாகத் திருப்பணி செய்யப்பெற்று உயிர் ஓவியங்கள் பல தீட்டப்பெற்று விளங்குகிறது. இந்த மண்டபத்தில்தான் ஆரூர்த்தியாகேசன் புத்தக நிலையமும் விலைபெற்ற வாகனங்களும் உள்ளன. மற்றும் தேவஸ்தான நிர்வாக காரியாலயமும் இருக்கின்றது. அதற்குப் பக்கத்தில் திருக்கோயில் ஓரமாக இருப்பது ஒரு சிறிய மண்டபம். அதற்குப் புராண மண்டபம் என்று பெயர்.

*கமலாம்பாள் சந்நிதி:*—இது அதனையடுத்துச் சபாபதி மண்டபத்தின் பின் பக்கத்தில் இருக்கிறது. இது ஒரு தனி அம்மன் கோயில். இங்கே அம்பிகை தவத்திருக் கோலம் கொண்டு எழுந்தருளியிருக்கிறார். இதுவும் பராசக்தி பீடங்களில் ஒன்று. அம்மையின் ஆலயம் ஈசானியப் பார்வையாகயிருப்பது தனிச் சிறப்பென்று பாராட்டப் பெருகின்றது. இவ் வம்மை திருக்கோயிலில் ஆடிப்பூர விழா நடைபெறும். அதற்காகத் தனியே கொடி மரமும் உண்டு. அம்மை கோயிலின் தென் பக்கத்தில் உச்சிட்ட விநாயகர் எழுந்தருளியிருக்கின்றார். அவரை

வழிபட்டுப் பின் நந்தியம்பகவானை வணங்கி உத்தரவு பெற்று உள்ளே சென்றதும் மஹாமண்டபத்து இரண்டு அழகிய சுதைத் திருவுருவங்கள் விளங்கும். அவை திருக்கைலாயத்திலே அம்மையின் தோழியர்களாக (அனுக்கத் தொண்டர்களாக) இருந்த அநிந்திதை, கமலினி என்பவர்களுடைய திருவுருங்கள். அவற்றைக் கண்டு உள்ளே சென்றால் அங்குக் கமலாம்பிகை அறிவானந்த வெள்ளத்தை அள்ளிவீசிக்கொண்டு, அமைத்த திருக்கரமும் பாசம், அக்ஷமாலை ஏந்திய திருக்கரங்களும், தாமரை பிடித்த திருக்கரமுமாக நான்கு திருக்கரங்களோடு திருப்பாதத்தை யொன்றன்மேல் ஒன்றாக மடக்கித் தொங்க விட்டுக்கொண்டு யோகாசனத்து எழுந்தருளியிருக்கின்றார். அம்பிகையின் திருவருள் பெற்று வலம்வரின் அம்மை கோயிலின் தெற்குப் பிரகாரத்து மேற்கு மூலையில் அக்ஷரபீடம் இருப்பதைக் காணலாம். அதில் பீடமும் மேல் திருவாசியுமே இருக்கின்றன. திருவாசியில் ஐம்பத்தோரக்ஷரங்களும் எழுதப் பெற்றுள்ளன. அம்மையை தரிசித்துவருகின்ற அன்பர்கள் இப் பீடத்து எதிரிலிருந்து தாம் கண்டு மனத்துப் பதித்த அம்பிகையின் திருவுருவத்தை அப்பீடத்து எழுந்தருளச் செய்து தியானித்துச் செல்வது வழக்கம். அதனையடுத்து சண்முகப்பெருமான், வள்ளி தெய்வயானை அம்மையாரோடு எழுந்தருளியுள்ளார். அவரை யடுத்துப் பாலசுப்ரமணியக் கடவுளும், அவரை யடுத்துக் கலைமகளும் இருந்து அருள் செய்கின்றனர். வடக்குப் பிரகாரத்தில் விஸ்வாமித்ரர், காசியபர் முதலிய மகரிஷிகளால் ஸ்தாபிக்கப் பெற்ற சிவ லிங்கங்களும் நாகங்களும் இருக்கின்றன. இவற்றின் எதிரில் சண்டேசுவரி கோயிலும் இருக்கின்றது. இவற்றை யெல்லாம் முறைப்படி வழிபட்டு வந்தால் அம்பிகை தோழி மார்களோடும், விநாயகர், கந்தர் முதலிய சிவ குமாரர் களோடும் எழுந்தருள் உருவங்களாக இருந்து அருள் வழங்குவர். தேவியின் திவருளைப் பெற்று வெளிவந்ததும் எதிரில் பார்ப்பதீச்சரம் என்னும் கோயில் மேற்குப் பார்த்த சந்தியாக இருக்கிறது. இதற்குத் தனியே பலிபீடம்,

நந்தி, அர்த்த மண்டபம் முதலிய அமைப்புக்கள் உள்ளன. இத் திருக்கோயிலிலுள்ள சிவலிங்கப் பெருமான் கமலாம்பிகையால் தாபித்து வணங்கப் பெற்றவர் என்பது புராண வரலாறு. இத் திருக்கோயிலுக்கு முன்பு (அதாவது கமலாம்பாள் கோயிலுக்கும் பார்ப்பதீச்சரத்திற்கும் இடையில்) ஒரு கிணறு இருக்கிறது. இதற்கு முக்திக் கிணறு என்று பெயர். அது 'மூக்குத்திக் கிணறு' என்று இப்போது வழங்குகிறது. அதற்குப் பக்கத்தில் திருக்கோயிலின் ஓரமாக ஒரு மண்டபமும், கோயிலும் இருக்கின்றன. அதுதான் ஒட்டுத்தியாகர் கோயில். விறன்மிண்ட நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருக்கோயிலுக்குள் போகாமற்றடுக்க, சுந்தரர் மனம் நொந்தனர். தியாகப் பெருமான் இந்த இடத்தில் பிரஸந்நராயிருந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காட்சி தந்தனர்.

தேவாசிரியன் என்னும் ஆயிரக்கால் மண்டபம்; இது இதற்கப்பால் வடகிழக்கு மூலையில் விளங்குகிறது. இது பழம்பெருமை படைத்தது. ' திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியம்'' என்று பேசுகிறது பெரிய புராணம். இங்குத் தான் தொடுத்த மலரொடு தூபமும் சாந்துங் கொண்டு எப்பொழுதும் அடுத்து வணங்கும் தேவர்கள் கூடியிருப்பர். சிவனடியார்கள் சித்தந் தெளிந்து சிவ மருந்து அருந்திச் சிவாநந்தப் பெருங்கடலில் திளைத்திருப்பர். ''விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்க சீரடியார் கூடி எண்ணிலார் இருந்தனர்'' எனப் பெரிய புராணம் அறிவிக்கின்றது. செல்வத் தியாகப்பெருமான் ஆழித்தேர் விழா முடித்து அங்கு எழுந்தருளிப் பெரு நீராட்டுக் (மஹாபிஷேகம்) கொண்டு சிவச் செங்கோல் செலுத்துவர். அதனல் இம்மண்டபம் ராஜதானி மண்டபம் என்றும் வழங்கும். 'தேவாசிரியன் எனும் திருக்காவணம்' என்று சேக்கிழார் பெருமான் கூறுவதால் இம் மண்டபத்தின் முன் யந்தரிடப் (காவணம் இட) பல கால்கள் நாட்டப்பெற்றுள்ளமை அறியப்பெறும். இந்த மண்டபத்தையடுத்து

மேல்பால் ஒரு சிறு குளம் உள்ளது. அது சங்க தீர்த்தம் எனப்பெறும். இதில் சித்திரை மாதம் பௌர்ணிமையன்று தீர்த்த விழா நடைபெறும். இத் தீர்த்தத்து நீராடித் தியாகேசனைச் சித்திரா பௌர்ணமியில் தரிசித்தவர்க்கு எல்லா நோய்களும் நீங்கும். இந்தத் தீர்த்தத்தில் கைகால் களைச் சுத்தி செய்துகொண்டு இரண்டாம் பிரகாரத்துத் திருமதிலைக் கடக்கவேண்டும். இரண்டாம் பிரகாரத்தையும் முதற் பிரகாரத்தையும் இணைப்பது ஒரு கோபுரம். இதற்கு ஆரியன் கோபுரம் எனப் பெயர். இக் கோபுரத்தின் இரு மருங்கிலும் விநாயக் கடவுளும், சுப்பிரமணியக் கடவுளும் எழுந்தருளியிருக்கிறார்கள் இவர்களை வணங்கிக்கொண்டு உட்புகுந்தால் கோபுர வாயிலில் இடது கைப்புறத்து உட்புறமாக வடக்குப்பார்க்க விறன்மிண்ட நாயனார் எழுந்தருளி இருக்கின்றார். அவர் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்திலுள்ள அடியார்களை வணங்காது வந்தாரென்று எண்ணி "அரன் அடியாரை அரன் எனத் தொழாத இவரும் புறம்பு, இவரை ஆட்கொள்ளுகின்ற அருள் தியாகரும் புறம்பு" என்று கடிந்துரைத்தவர். கணநாதருள் ஒருவராம் பேறுபெற்றவர். ஆதலால் இங்கு வழிபாட்டிற்கு வருவார் முதற்கண் தேவாசிரிய மண்டபத்தை அடியார்கள் இருப்பதாகப் பாவித்து வணங்கி விறன்மிண்ட நாயனாரையும் வணங்கி அவரிடம் விடைபெற்றே உட்செல்லவேண்டும் என்பது இக் கோயில் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும். கோபுரம் கடந்ததும் இந்திரன் கொடிமரம் தோன்றும். அதற்கு அடுத்துக் காட்சி வழங்குவது நந்தி பலிபீடத்துடன் கூடிய ராஜநாராயண மண்டபம். அங்குத் தியாகராஜப்பெருமான் பங்குனி உத்தரத் திருநாள் இறுதியில் எழுந்தருளி எண்ணெய்க் காப்பு ஏற்றுக்கொள்வர். அதனால் எண்ணெய்க் காப்பு மண்டபம் எனவும் அழைக்கப்பெறும். திருவாதிரைத் திருநாளுக்கும் அங்கு எழுந்தருள்வது உண்டு. அது இராஜநாராயண சோழனால் கட்டப்பட்டது.

அம்மண்டபத்தின் வலப்பக்க முகப்பில் விநாயகர் சந்நிதியும் இடப்பக்கம் துர்க்கை சந்நிதியும் காணப்பெறும். பின் தெற்குநோக்கி ஜ்வரஹரேஸ்வரர் சந்நிதி உள்ளது. அதனை வழிபட்டுத் தெற்கு நோக்கிச் சென்றால் இடது பக்கத்து மண்டபத்தில் ஏகாதசருத்திரர்களால் வழிபாடு செய்யப் பெற்ற சிவலிங்கங்கள் உள்ளன. அவைகளை வழிபட்டுக்கொண்டு அபிஷேகக் கட்டளை அறைவாசல், சுவாமி மடைப்பள்ளி, வாகன அறை, இராஜன் கட்டளை அறைவாசல் இவைகளைக் கடந்து செல்லவேண்டும். பின்னர்க் கணபதியையும், முசுகுந்த தேவரையும், உடையார் தேவரையும் தரிசித்துச் துளசி மகாராஜா பூஜித்த லிங்கம், தேவேந்திரன் பூஜித்த லிங்கம் இம் மூர்த்திகளை தரிசித்து, தூலலிங்கங்களாகிய கோபுரங்கள் ஏழையும், மணிமண்டபத்துக்குக் கீழ்பால் உள்ள சதுரக் கல்லின்மேல் நின்று தரிசித்துத் திருவாரூர் அரநெறியை அடைதல் வேண்டும். அரநெறி ஒரு தனித் தலம். திருநாவுக்கரசு நாயனருடைய பாடல் பெற்றது. திரு முன்னுள்ள நந்தி, பலிபீடம் இவற்றை வழிபட்டு உள்ளே சென்றால் அரநெறி நாதரைக் காணலாம்.

அசலேசுவரர்:— இறைவன் திரு நாமம் அசலேசுவரர் என்றும் வழங்குகிறது. அம்பிகைக்கு வண்டார்குழலி என்றும் பெயர் உண்டு. அவர்களை வழிபட்டு அத் தலத்தில் மாத்திரம் சிறப்பாக உள்ள நடராசப்பெருமானை வழிப்பட்டு அக்கினிஸ்தம்பத்தையும் கண்டு முன் மண்ட பத்திலுள்ள கும்பாபிஷேகத்திற்குப் பயன்படும் பல சித்தி ரங்களையும், பஞ்ச லிங்கங்களையும் பார்த்துத் திரும்பலாம். இத் தலத்துத்தான் நமிநந்தியடிகள் என்ற நாயனர் சமணர்களின் கொடுமையால் திருவிளக்கிட எண்ணெய் கிடையாமல்போக தேவதீர்த்த நீரைவிட்டுத் திருவிளக்குக் தொண்டு செய்தார். இதனைச் சமயங்காத்த முதியவராகிய அப்பரடிகள் 'ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன்

நம்பி நந்தி நீராற்றிருவிளக்கிட்டமை நீணுடறியுமன்றே' என்ற திருவிருத்தப் பகுதியாலும், ''நந்தி பணிகொண்டரு ளும் நம்பன்தன்னை'' என்ற தாண்டகப் பகுதியாலும் அறி வுறுத்தி இருக்கின்ருர்கள். இதனை ''நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய'' என்ற சேக்கிழார் திருவாக்கும் விளக்கி அருளுகின்றது. இங்குத்தான் திருப் பணி கட்டும் மண்டபம் இருக்கின்றது. இது கழற்சிங்க ராகிய ஓரரச நண்பருடைய தொண்டினை யாமறியச் செய்தது; செருத்துணையார் சிவ வீரத்தைத் தெரிவித்தது எங்ஙனமெனில், கழற்சிங்கர் என்னும் பல்லவ வேந்தன் தன் பெருந்தேவியோடு பூங்கோயில் வழிபாடு செய்து வலம் வருகின்ருர். பள்ளித்தாம மண்டபத்து சிந்திக்கிடந்த பூவை, அரசி எடுத்து மோந்தாள். திருமாலைத் தொண்டு செய்துவந்த செருத்துணையார் அரசியின்மூக்கை அரிந்தார். அதுகண்ட அரசர் அது போதாதென்று எடுத்த கையையும் வெட்டினுர். இறைவன் இருவருக்கும் இன் னருள் புரிந்தார். இத்தகைய மண்டபம் அரநெறியின் முன் மண்டபம். இத்தலம் தலபுராணத்தில் அசலேசம் என வழங்கும். சமற்காரன் என்னும் மன்னவன் நானூறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து சிவபெருமானைக் காணப் பெற்றனன். சிவபெருமான் நீ விரும்புவது யாது என்று வினவினுர். அவன் இத்தலத்து அடியேன் தாபித்து வழி படுகின்ற இலிங்கத் திருமேனியில் எழுந்தருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அவ்வாறே இறைவன் சலியாது எழுந்தருளியதால், அசலேசம் எனப் பெயரா யிற்று. சிவராத்திரியில் வழிபாடு செய்தல் மிகுந்த பலனை அளிப்பதாகும். இச் சிவலிங்கத்தில் ஒரு தனி மகிமை உண்டு. அசலேசுவரர் நிழல் கிழக்குத் திசையிலன்றி, மற்ற திசைகளில் விழாது. ஆறுமாதத்திற்குள் இறப்ப வர்கள் நோக்கினுல், அந்த நிழலும் தெரியாது. இவ் வுண்மைகளை ''அந்த லிங்க நன்னிழல் குணதிசையிலன்றி வந்திடாதொரு திசையினும் இம்மொழி வாய்மை'' எனவும்

''ஆறு திங்களில் இறப்பவர் நோக்கினுல் அந்த வீறிலா நிழல் காணுரு தென்றும்'' எனவும் வரும் திருவாரூர்ப் புராணப் பகுதிகளால் அறியலாம்.

இவ்வாறு இத்தலத்தை வழிபட்டுக்கொண்டு, முறையே இரண்டாம் தெற்குப் பிரகாரத்திலுள்ள தக்ஷேசுவரர், மனுச்சக்ரேசுவரர், பகீரதேசுவரர், கைலாசத்தியாகர், பாண்டியநாதர், சப்தமாதர், சப்தரிஷிசுவரர், சேரநாதர் இவர்களை முறையே வழிபட்டு ஆடகேசுவரத்தை அடையலாம்.

ஆடகேசுவரம்:—இது அப்புஸ்தலம். இங்கு ஒரு நாகபிலம் உண்டு. சிவலிங்கப்பெருமான் அம்மையாரோடு எழுந்தருளியிருக்கின்ருர். இவரை ஒருமுறை வழிபடுபவர் இந்திர பதவியை அடைவர். இதனை அறிந்த இந்திரன் பொருமை கொண்டு அப்பிலத்தை ஒருகால் மலைப்பாறை கொண்டு மறைத்தான். முருகன் கிரவுஞ்ச மலைமேல் வேலாயுதத்தை எய்த காலத்து எல்லா மலைகளும் ஆடின. அப்போது இந்தப்பாறையும் ஆடிற்று. அதனைக்கண்டு அஞ்சிய முனிவர்கள் முருகனிடம் விண்ணப்பித்தனர். முருகன் மலைப்பாறையின்மேல் வேலை ஊன்றி நான்கு சக்திகளை நிலைக்கச் செய்து காப்பாற்றினர். இதில் எழுந்தருளிய சிவலிங்கத் திருமேனி மிகவும் வனப்புடையது. அதனை வழிபட்டு வலமாகச் சென்ருல் பக்கத்தில் பாதிரி மரம் இருக்கக் காணலாம். இது இத் தலத்தின் விருக்ஷமாகும். இதனையும் வழிபட்டு முறையே விசுவாமித்திரேசுவரர், புரூர்வசக்கரேசுவரர், மகாபலீசுவரர், ரௌத்திர துர்க்கை, அருணசலேசுவரர் வருணேசுவர விநாயகர், வருணேசுவரர் என்ற மூர்த்திகளை வழிபடலாம். பின்னர் அதனை அடுத்து ஒரு நந்தவனம் காணப்படும். அது உள்துறைக் கட்டளைக்குரிய கொட்டாரமாக இருந்தது. அதற்குள் கருங்கல்லால்

ஆக்கப்பட்ட மிடாக்களைக் காணலாம். அடுத்தது இரண்டாம் பிரகாரத்தின் மேற்குப் பக்கம். அதில் முறையே தம்னேசுவரர், கைகூட்டு விநாயகர், லக்ஷ்மேசுவரர், அக்னிசுவரர் முதலிய திருமேனிகளை வழிபட்டுக்கொண்டு ஆனந்தேசுவரத்தை அடையலாம்.

ஆனந்தேசம்:- இத் திருக்கோயிலில் விநாயகர், மூத்தாள், முனிவர், கோணப்பிள்ளையார், தியேஷ்டாலிங்கம், இவர்களை வழிபட்டுக்கொண்டு ஆனந்தேசுவரரைக் காணலாம். இது மங்கணன் என்னும் முனிவரால் தாபிக்கப்பட்டது. அம்முனிவர் ஆகம விதிப்படி வழிபாடு செய்து சித்தியும் பெற்றார். அவ்வானந்தம் தாங்கமுடியாமல் கூத்தாடினார். அதனால் இவ்விலிங்கம், ஆனந்தலிங்கம் என்று பெயர் பெற்றது. பட்டினசாமி என்னும் செட்டி ஒருவன் தாமரைப்பூ விற்றுப் பிழைத்து வந்தான். ஒருநாள் தாமரைப்பூக்கள் விலையாகவில்லை. அப்பூக்களைக் கொண்டுவந்து யதேச்சையாக ஆனந்தேசுவரருக்கு அர்ச்சனை செய்வித்தான். அன்று வைகாசி விசாக நாள். அதனால் அவன் மறுமையில் அரசனாகிக் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டான். இச் செய்தியை 'தென்னாரூர், ஆனந்தர் எம்மை அணிந்துய்த்தார். உண்டென்று தேனந்தகஞ்சம் தெளிப்பது' என்று தாமரை கூறுவதாகத் திருவாரூர் உலாவும் தெரிவிக்கிறது, (உலா 140 கண்ணி). பின்னர் வடக்கு இரண்டாம் பிரகாரத்து ஏழு கோபுர தெரிசனங்களைச் செய்து கொண்டு வலம் சென்றால், முறையே புராணேசுவரர், அநுமந்தேசுவரர் விபீஷணேசுவரர், பாலசுப்ரமணியர், கர்ப்பேசுவரர் முதலிய மூர்த்திகளை வழிபடலாம்.

விசுவகர்மேசுவரம்:— இது ஒரு அழகிய கருங்கற்பணி நிறைந்த நற்கோயில். இதில் இதன் பெயருக்கு கேற்ப அழகிய கொடுங்கைகளும், வரிகளும், திருவுருவங்களும் செறிந்துள்ளன. இது சிற்பக் கலையின் சிறந்த எடுத்துக்-

காட்டாக இருக்கிறது. இத் திருக்கோயிலில் தக்ஷிண மூர்த்தி, கணபதி, துர்க்கை, பிரம்மா முதலிய திரு உருவங்கள் அழகுற அமைந்துள்ளன. இறைவன் திருநாமம் விசுவகர்மேசுவரர் என்பது. இவரை வழிபட்டு, அருள் பெற்று, கலைத்திறங்கள் கண்டு களித்து மேற்செல்லின் வருணேசுவரர், பைரவர், பரசுராமேசுவரர், வசிஷ்டேசுவரர், அர்க்கனேசுவரர், சபாபதீசுவரர், அகஸ்தீசுவரர், சிங்கநாதர் (அயக்கிரீவேசுவரர்), அதர்வணேசுவரர், சாமவேதேசுவரர், வியாசேசுவரர், பக்தேசுவரர், ரிக்வேதேசுவரர், எஜுர் வேதேசுவரர், வில்வாதீசுவரர் ஆகிய இம் மூர்த்திகளை வழிபட்டுச் சித்தீசுவரத்தை அடையலாம்.

சித்தீசுவரம்:—சித்தீசுவரத்தில் தனியாகப் பிள்ளையார் பைரவர், அம்பிகை முதலிய திருவுருவங்கள் இருக்கின்றன. சந்நிதி மேற்குப் பார்த்த சந்நிதி. அம்சன் என்னும் அரசன் பஞ்சாக்ஷர ஜபம் செய்து சித்தி பெற்றுச் சித்தீசன் என்ற பெயரோடு அரசாண்டு வந்தான். அவன் பிள்ளையில்லாக் குறையைத் தீர்த்துக்கொள்ளச் சுக்கிராச்சாரியரின் உபதேசப்படி இத்தலத்துக்கு வந்து, இச்சிவலிங்கத்தைத் தாபித்து வழிபட்டு எண்ணம் ஈடேறப்பெற்றான். ஆதலால் இத் திருக்கோயில் சித்தீசம் என வழங்கலாயிற்று. ஒரு அந்தணச் சிறுவன் முனிவர்கள் தவத்திற்கு இடையூறாகத் தண்ணீர்ப் பாம்பு ஒன்றை எடுத்து அவர்கள் கூட்டத்து விட்டு விளையாடினான். ஒரு முனிவர் முனிந்து சபித்தார். ஷடாக்ஷர மந்திரத்தை இங்கிருந்து ஓதி அச் சாபம் நீங்கப் பெற்றான். இக் கோயிலை அடுத்து தக்ஷிணமூர்த்தி சந்நிதானம் ஒன்று இருக்கிறது. இங்குத்தான் தருமபுர ஆதின ஆதி பரமாசார்ய சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் கமலை ஞானப்பிரகாசரை அணுகித் தன் குருவாகக்கொண்டு உபதேசம் பெற்றுச் சொக்கலிங்கமூர்த்தியின் பூசையை எழுந்தருளுவித்துக் கொண்டார்கள். இவ்வரலாறு கமலை ஞானப்பிரகாசர் மான்மியத்

துள்ளது. இத்தகைய சித்தீஸ்வரத்தை வழிபட்டு மகா யாகசாலையை வணங்கிக் கட்டளை அறைகளையும் கண்டு விநாயகர், சுப்பிரமணியர் யாகசாலைகளையும், மூவர் மூலஸ்தானத்தையும் கண்டு புலஸ்தியரிஷீஸ்வரர், புலஸ்தியப்ரம்மேஸ்வரர் இவர்களையும் வணங்கி, மீட்டும் இந்திரக்கொடிமரத்தையும், ராஜநாராயண மண்டபத்தையும் வலம் வந்து அர்த்தஜாமக் கட்டளை, செட்டியார் கட்டளை, அறைவாசல்களைக் கடந்துசென்ருல், ஒரு பெரிய மண்டபம் காணப்பெறும். அதற்குத் தட்டம்சுற்றி மண்டபம் எனப் பெயர். அம்மண்டபத்தில் வல்லபை கணபதி எழுந்தருளியிருக்கிருர். அவரைவழிபட்டுச் சிறிது வடக்கு நோக்கிச் சென்ருல் கொடிமரம் தோன்றும். கொடிமரத்தடியில் விநாயகர் இருக்கிருர். விநாயகருக்குப் பொற்கம்ப விநாயகர் என்பது திருநாமம்.

அவரை வழிபட்டு மேற்கே திரும்பினுல் வன்மீகநாதர் சந்நிதி தோன்றும். வன்மீகநாதர் அருட்காந்தம் காட்டி அன்பர் உள்ள இரும்பை இழுத்துத் தன் அடிக்கீழ் வைத்தருளுவர். அவர் சந்நிதியை அணுக ஒரு கோபுரத்தைக் கடந்து செல்லுதல் வேண்டும். அந்தக் கோபுரம் அழகியான் கோபுரம் என்று அழைக்கப் பெறும். இக்கோபுர வாயிலின் இருமருங்கும் சுதையாலாக்கிய அழகிய துவார பாலகர் திருவுருவங்கள் மிகப் பெரியனவாகக் காட்சியளிக்கின்றன. அவைகளை வழிபட்டு அனுமதி பெற்று உள்ளே நுழைந்தால், கோபுரவாயிலின் நடுவில் போவாரது இடது கைப்புறமாக வடக்குப் பார்க்க அதிகார நந்தி எழுந்தருளியிருக்கக் காணலாம். அவரை வழிபட்டு உள் நுழைந்து வலம்வரின் முதற் பிரகாரத்து நர்த்தன மண்டபத்திலுள்ள தர்ப்பணம், பலிபீடம் நந்தி இவர்களை வணங்கிக் கிளிக்குறட்டிலுள்ள அம்மையோடு கூடிய பிரதோஷ நாயகுரையும், சந்திரசேகரர், சோழ மகாராஜா, மாணிக்கவாசகர், திரிபுர சங்காரமூர்த்தி இவர்களையும் வழிபட்டு இடப்பக்க வாயிலாகக் கர்ப்பக்கிரகத்

திற்குள் சென்ருல், ஐங்கலக்காசு விநாயகரை வழிபடலாம். இவருக்கு அழகிய சோழவிநாயகர் என்றும் பெயருண்டு. அழகியான் கோபுரமும் இவ்விநாயகர் திருநாமமும் ஒத்திருப்பதால் இவை இரண்டும் அழகிய சோழன் திருப்பணியாக இருக்கவேண்டும். அதற்கேற்பச் சோழனெருவன் ஐங்கலப் பொற்காசு கொண்டு இவ்விநாயகரை ஆக்கினுன் என்ற கர்ண பரம்பரைச் செய்தியும் தெரிவிக்கின்றது.

அவரை வழிபட்டு இடது கைப்புற வழியாக உள் நுழைந்தால் வன்மீகநாதருடைய அணுக்கன் வாயிலை அடையலாம். இத்திருக்கோயிற் பகுதி திருமூலட்டானம் என வழங்கப்பெறும். இத் திருக்கோயிலைப் ''பூங்கோயில்'' எனவும் வழங்குவதுண்டு. இது பூமிதேவியின் இதயகமல மாதலின் பூங்கோயில் என வழங்கப்பெறும் ''தேங்காவி நாறுந் திருவாரூர்த்தொன்னகரில் பூங்கோயில் உள்மகிழ்ந்து போகாதிருந்தாரே'' என்ற அப்பர் திருவாக்கு இப்பெயரை நன்கு விளக்கும். பெருமான் திருநாமம் புற்றிடங்கொண்டார் எனவும் வழங்கும். வன்மீக நாதரது வலப்பக்கத்து அர்த்த மண்டபத்தில் பிரியாவிடை அம்மை எழுந்தருளியிருக்கிருர். அவருக்குச் சோமகுலாம்பிகை என்ற பெயர் வழங்குகிறது. அவரையும் வழிபட்டு அருட்சத்தி சிவத்தோடு இணைபிரியாதிருத்தலை எண்ணி நைந்து பணிந்து வந்தவழியே திரும்பி முதற்பிரகாரம் வந்தால், சூரியன் ஆதித்தலிங்கம் இவர்களை வழிபடலாம். மேற்செல்லின் தியாகராஜப் பெருமானுடைய சந்நிதி தோன்றும். அவருக்கு எதிரில் இருபெருவேந்தர் எழுந்தருளியிருக்கின்ருர்கள். ஒருவேந்தர் புவிவேந்தராகிய சேரமான் பெருமான் ஒருவேந்தர் நாவலர் காவலராகிய சுந்தரர் பெருமான். அவர்கள் வணக்கக் குறிப்பும் திருமுக நோக்கும் தியாக வள்ளலைக் காட்டிலும் நோக்கத்தகும் பொருள் இல்லை என்பதை நமக்கும் உணர்த்தி வழிகாட்டும் தியாகப் பெருமான் திருமுன்பு நந்தியம் பெருமான் நின்று கொண்டிருக்கிருர். இது இத்தலத்துச் சிறப்புக்களில் ஒன்று.

"அடியார்கள் குறைதீர்க்க முன் தூது சென்றதுபோல திருவடி நோவச் செல்லுதல் ஆகாது, அத்தொண்டிற்கு யானும் துணை செய்வேன் என்றதுபோல இடபம் எழுந்து நிற்கின்றது" என்று தியாகராஜலீலையில் திருவாவடுதுறை ஆதீன மஹாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். "பிணை அடியர் குறைக் கிரங்கிப் பெருமானீ எழுந்தருளில், துணையடிகள் கன்றமுனம் தூது சென்றார் போலடையாது, அணைகுதியென் வெரி நிவர்ந் தென்றருள் நோக்கி நிற்பதுபோல், இணையில் விடங்கப் பெருமான் எதிர்நிற்கும் மால்விடையே" என்பது அச்செய்யுள்.

இத்தகைய நந்தியெம்பெருமானை வணங்கி மேற் செல்லின் மூலாதார கணபதியையும், முதற் பிரகாரம் தென் பக்கத்தில் மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியவர்களையும் வழிபடலாம். அவ்விடத்துப் பஞ்சமுக வாத்தியம் இருக்கிறது. பின்னர் முறையே உற்சவ மூர்த்தி அறுபத்து மூவர்களையும் மூலவர் அறுபத்து மூவர்களையும் வழிபட்டுத் தென்னன் திருவாசல் வழியாகத் தியாகப்பெருமான் சந்நிதியை அடையலாம். திருமுன்னின்று சரவிளக்குகளையும், வாயிற்படிகளையும் நோக்கினுல் அவை ஒன்றற்கொன்று அடங்கி அடங்கித் தோன்றுவது உலகியலில் பரந்து விரிந்திருக்கின்ற ஆன்மாக்களின் அறிவை ஒடுக்கி ஒடுக்கிச்சென்று 'ஒன்று நீயல்லை யன்றி மற்றில்லை' என்ற பொருளிடத்து—தியாகச் செல்வரிடத்துச் சென்று சேர்ப்பிக்கும். செல்வத்தியாகர் இரத்தின சிங்காதனத்தில் முன்னே இருவாட்படை விளங்க நடுவில் பூச்செண்டு பொருந்த எழுந்தளிக் காட்சி வழங்குவர். அக்காட்சி நமக்கும் குவிந்த மனத்தோடு எப்போதும் கும்பிட்டு நிற்கும் பேறு கிடைக்காதா என்று உருகும் எண்ணத்தையும் விளைவிப்பதாகும்.

தியாக அரசின் முழுக்கருணையையும் எதிரிருந்து

நோக்கி நுகரும் பேறுபெற்றவர். அருங்கலி ஆதிசைவரும் சேரரும் அன்றி வேறு யாவர்? அத்தியாகப் பெருமான் பக்கலில் அம்மையார் எழுந்தருளியிருக்கின்றார்கள், அவ் வம்மை 'கொண்டி' என அழைக்கப்பெறுகிறார். எங்கள் அப்பரடிகளும் 'தண்டவாளியே' என்ற திருப்பாடலில், "கண்டு கண்டிவள் காதலித்தன்பதாய்க், கொண்டியா யினவாறு கோதையே" என்று விளக்கி யருளினார்கள். ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களும் "பாடல் மலியத் தனியிற் பருமணிச் சிங்காதனத்திற் கூடலுற இடப்பாகம் எழிற்கொண்டியோடும்" என்று கூறுகின்றார் கள். இவர்களது இடையே இருவர் அன்பும் அருளும் வடிவான ஆறுமுகக் கடவுள் எழுந்தருளியிருக்கின்றார். இந்நிலையை "வெள்ளிலைவேல் நம்பியோடும் ஆடரவக் கிண் கிணிக்கால் ஐயன் இருந்து அரசு செய்யும்" என்று தியாகராஜ லீலை விளங்குகின்றது. தியாகப்பெருமானுக்கு வலப்பக்கத்து ஒரு பீடத்தில் ஒரு பெட்டகம் காணப் பெறும். அதில் மரகதத்தலான சிவலிங்கப்பெருமான் எழுந் தருளி இருக்கிறார். அவருக்கு வீதிவிடங்கர் என்று திருநாமம் அவருக்குத்தான் காலை, மாலை இரண்டாங்காலங்களில் அபிஷேகம் நடைபெறும். தியாகப்பெருமான் திருமுகத் தையும், அம்மையின் திருமுகத்தையுமே அன்பர்கள் எப் போதும் காணக்கூடும். திருக்கரத்தின் ஒரு பகுதியை அபிஷேக காலங்களில் காணலாம். பாதங்களில் மார்கழித் திருவாதிரையில் இடது பாதத்தையும் பங்குனி உத்தர பாதத்தில் வலது பாதத்தையும் காணவேண்டும். மற்றைய திரு அங்கங்கள் மிகுந்த இரகசியமானவை. 'முகத்தைக் காட்டும் மூடுமந்திரம் ஏதுக்கையா' என்ற அன்பு ததும்பும் கீர்த்தனை ஒன்று இதனை அறிவிக்கிறது. தியாகராஜருக்கு தொடர்புடைய ஒவ்வொரு பொருளுக்கும் பெயருண்டு. அவர் அசைந்தாட இடப்பெறுந்தண்டு. மணித்தண்டு. கொடி தியாகக்கொடி. ஆசனம், இரத்தின சிங்காசனம், வாள், வீர கண்டயம். இவ்வாறே மற்றவற்றிற்கும் பெயருண்டு. அவற் றின் காரணமும், அமைப்பும் விரிவான நூலிற் பிற்காண்க.

தியாகப்பெருமானுக்கு உவப்பான மாலை செங்கழுநீர் மாலை இத்தலத்தில் விடுபூக்களாற் செய்யப்பெறும் அலங்காரம் போல வேறு எங்கும் காணமுடியாது. இவருக்கு வீதி விடங்கர். தேவரகண்டப் பெருமான், தியாகப்பெருமான் தியாகவினோதர், செவ்வந்தித்தோடழகர், செங்கழுநீரழகர், கம்பிக்காதழகர், ஆடரவக்கிண்கிணிக்காலர், தேவசிந்தாமணி முதலிய இருபது திருநாமங்கள் காரணங் குறித்தனவாக அன்பர்க்கெளிவந்த அருமையை வெளிவிடுப்பனவாக உள்ளன. கருணாகரத் தொண்டமான் என்ற விருதாவளிப் பெயருங்கூடத் தியாகருக்கு உண்டென்று சோழமண்டல சதகம் கூறும். இவர் ஆடும் நடனம் அஜபா நடனம்.

இத்தகைய தியாகப்பெருமானை வணங்கித் தெற்கு வாசல் வழியாக வந்தால் தென்னந்திருவாயில் ஓரமாகத் தியாகப் பெருமான் திருமாலின் மார்பில் வீற்றிருக்குங் காட்சியைச் சிறந்த சித்திரம் விளக்கி நிற்பதைக்காணலாம். அதனை வழிபட்டுத் தக்ஷிணாமூர்த்தியையும் வணங்கி மேலைப் பிரகாரம் அடையலாம். அங்கு அன்னபூரணி, காட்சி கொடுத்தார் முதலிய திருவுருவங்களையும் வணங்கலாம். அங்கு அடுத்துக் காட்சி அளிப்பவர் ஸ்தல விநாயகர். ஸ்தல விநாயகர் திருநாமம் வாதாபி விநாயகர் என்பது. இவ் விநாயகர் ஒரு காலத்துக் கலகக்காரர்களால் கலிங்க தேசம் வரை கவர்ந்து செல்லப்பட்டதாகவும், திருடர்களுக்குத் தீங்கு நிகழ்ந்ததாகவும், அவர்கள் அவரை அங்கு விட்டுச் சென்றதாகவும், விநாயகப்பெருமான் இவண் மீண்டருளினார் என்றும் கர்ணபரம்பரைச் செய்தியுண்டு. இதனை அறிவிப்பது தியாகராஜ லீலை. "கடவுள் வாழ்த்து 29 ஆம் பாடல்" சங்கீத மும்மணிகளில் ஒருவராகிய முத்துசாமி தீக்ஷிதர் அவர்கள் இவ் விநாயகர் மீது பாடியுள்ள 'வாதாபிகணபதிம் பஜேஹம்' என்ற பாடல் இன்று இசையரங்குகளில் முதற் பாடலாகப் பாடப்பெற்று வருகின்றது. அவருடைய சந்நிதியிலேயே பஞ்சமுக விநாயகர் எழுந்தருளியிருக்கிறார்.

அவரை அடுத்து முறையே சகஸ்திரலிங்கம், விஸ்வ நாதர் சிவலிங்கங்கள். சித்திரபீடமும் உற்சவ பிக்ஷா டனரும் இருக்கின்றனர். வன்மீகநாதருக்கு மேற்கிலுள்ள மகாலக்ஷ்மியையும், துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, உற்சவ மூர்த்திகளையுந் தரிசித்து வடமேற்குக் கோடியிலுள்ள முருகன் சந்நிதியை அடையலாம். இவற்றுள் சகஸ்திர லிங்கத்தின் பாணத்தில் ஆயிரம் சிவலிங்க உருவங்கள் அமையச் செய்யப்பெற்றுள்ள சிறப்புச் சிறப்பு கண்டு இன்புறத்தக்கது. மந்திரபீடம் இத்தலத்திற்கு விசேடமா னது இது அகஸ்திய முனிவரால் மந்திரங்களை எல்லாம் ஆவாகனம்செய்து நிறுவப்பெற்றது. அதனை வழிபட்டே அகஸ்தியர் கடலைவற்ற உண்ணும் ஆற்றலைப் பெற்றார். இப் பீடத்தை வலம்வந்து வணங்கின் பூத பிசாசுகளின் துன்பம் நீங்கும். பகை அழியும். செல்வம் பெருகும். எல்லாச் சித்திகளும் எய்தும். வடக்குப் பிரகாரத்தில் முதற்கண் ஒன்பது கோள்களும் விளங்குகின்றன. மற்றக் கோயில்களைப் போல் கோள்கள் தத்தம் நிலைமையில் மாறுபட்டிருப்பதில்லை. நேரே அமைந்திருக்கின்றன. அரசர் திருமுன் அவைகள் வக்கரிப்பதில்லை என்று சொல்லப் பெறுகின்றது.

வடக்குப் பிரகாரத்தின் நடுவில் ஒரு சிவலிங்கத் திருவாலயம் காணப்பெறும். அவர் பெயர் ரணவிமோச னேசுவரர் என்பதாகும். இப்போதும் அவரை வணங்கின் ஆறாத புண்கள் ஆறும். கடன் தொல்லைகள் நீங்கும். அதற்குக் காணிக்கையாக உப்பு வாங்கிக் கொட்டப் பெறுகின்றது.

அவரை வணங்கி வலமாகவரின் பின்புறம் துர்க்கை கோயில் இருக்கக்காணலாம். அதனை வழிபட்டு வலமாக வரின் சண்டேஸ்வரர் சந்நிதியை அடையலாம். சண்டேஸ் வரர் சந்நிதி இரண்டு. ஒன்று சண்டர் மூலவர். அவர் ஜடை, தாடி முதலியவற்றுடன் ஒரு காலை ஊன்றி

முழந்தாளில் முகத்தை வைத்திருப்பர். அவர் எமசண்டர் திருவாரூர்ப்பிறந்தார்கள் சிவகணநாதர்களாக இருத்தலின் எமன் தனக்குத் தண்டவேலை இன்றிப் போதலை உணர்ந்து வருந்தியபோது இறைவன் 'நம்மை வணங்கும் பயனை வழங்கும் சண்டேசனும் பதவி தந்தோம்' என்றருளினர். ஆதலால் எமனே சண்டேசனுக இருக்கின்றார். அவருக்கு வலப்பக்கத்தில் நின்ற திருக்கோலமாக உலாவந்து காட்சி வழங்கும் சண்டர் இருக்கின்றார். இவர் ஆதிசண்டராவர். இவர் பங்குனி உத்தரத் திருநாள் வந்தமையை அனைவருக்கும் ஓலை எழுதி அறிவிப்பர். 'ஆதிசண்டேஸ்வர தேவகம்பி' என்றே கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன, தேவஸ்தான காரியங்கள் யாவும் அவர் பேராலேயே நடைபெறுதல் வேண்டும். இதனைத் தியாகர் கருமுகங்களும் பங்குனித் திருநாள் காணுறவம்மின் என்றினிய, திருமுக மலர்ந்து திருமுகமெழுதும் சேய்ஞலூர்ப்பிள்ளை'' என்ற தியாகராஜ லீலை விளக்கும்.

அதே பிராகாரத்து வடகீழ்க் கோடியில் இருப்பது சந்திரசேகரர் கோயில், உற்சவ மூர்த்தியாகிய சந்திர சேகரர் தருணேந்துசேகரி என்ற அம்மையோடு எழுந்தருளியிருக்கிறார். கீழைப் பிரகாரத்தின் வடபகுதியில் ஒரு கால பைரவர் எழுந்தருளியிருக்கிறார். அவர் கண்டார் அஞ்சும் வீரத்தோடு விளங்குபவர்.

இவ்வாறு உட்பிரகாரத்தை வழிபட்டு வெளிவந்தால் அருட்சத்தியாகிய அம்மை கோயிலை அடையலாம். அம்மையின் திருநாமம் அல்லியங்கோதை. வடமொழியில் நீலோத்பலாம்பிகை என்பர். அம்மையின் திருவுருவம் நான்கு திருக்கரங்களையுடையது. அவற்றுள் இடது திருக்கரம் (தோழி இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டிருக்கும்) முருகன் சிரத்தைத் தீண்டிக்கொண்டிருக்கிறது. இத்தகைய (கந்தர் சிரத்தைத் தீண்டும் திருவுருவம்) எங்குங் காண இயலாதது. இங்குத்தான் பள்ளியறை

இருக்கிறது. இங்கு அழகிய சித்திரங்கள் காட்சி அளிக்கின்றன. அவற்றையும் கண்டு இராஜநாராயண மண்டபத்து வடபுரமாகச் சித்தீச்சுரம் தக்ஷிணாமூர்த்தி திருமுன் இருந்து பஞ்சாக்கரம் ஜபித்து வெளிவருதல் வேண்டும்.

தலவிருக்ஷம்; பாதிரி: இது ஆடகேசுவரத்திற்குத் தென்பாகத்தில் இருக்கிறது.


## சுற்றுக் கோயில்கள்

இத்தலத்தின் திருவீதிக் கண்ணும் சற்றுத் தூரத்தும் பல கோயில்கள் விளங்குகின்றன. திருத்தேருக்குச் சமீபமாக ஸந்நிதியில் பரவையுண்மண்டளி என்ற திருக்கோயிலுண்டு. அதுவும் சுந்தரர் பெருமான் திருப்பாடலாற்றிகழ்வது. இறைவன் திருநாமம் தூவாயர்; இறைவி திருநாமம் பஞ்சின்மெல்லடியாள். ஆனால் இறைவன் மண்டலேசன் என வழங்கப்பெறுகிறார். துருவாசர் திருவுருவம் ஒன்று விநாயகருக்குப் பக்கத்தில் உள்ளது. துருவாசர் வழிபட்டதால் துருவாச நயினார் என்ற திருநாமமே தூவாநாயினார் என்று ஆயிற்று. ஆனால் சுந்தரர் திருவாக்கு, 'தூவாயா தொண்டு செய்வார் படுதுக்கங்கள் காவாயே' என்றும், 'பஞ்சேறுமெல்லடியாளை ஓர் பாகமாய்' என்றும் வருவன இறைவன் இறைவி திருநாமங்களை விளக்கும் உண்மைச் சான்றுகளாம்.

தேரடியில் தண்டபாணி எழுந்தருளியிருக்கிறார். அவர் திருவுருவம் மனதைக் கவரும். கண்கண்ட தெய்வமாகப் பலர் போற்றிப் பயன்பெறுகின்றனர்.

திருக்கோயிற் பரவையுண்மண்டளியின் பின்பக்கமாகத் திருநீலகண்ட நாயனார்குத் தனிக் கோயில் இருக்கிறது இது சிறிது சிதிலமான கோயில்.

"செம்பொனின் றேர்கான்"



கல் தேர்

...MARA PUBLIC LI...

தெற்குச் சந்நிதியில் பரவை நாச்சியார் கோயில் இருக்கிறது. சுந்தரர் பெருமானோடு பரவையார் காட்சி வழங்குகிறார்.

அதனையடுத்து ராஜதுர்க்கை கோயில் இருக்கிறது. துர்க்கை சிங்கவாகனத்தின்மீது எழுந்தருளியிருக்கிறார். வெள்ளிக்கிழமைதோறும் நிறைந்த அன்பர்கள் வழிபட்டுப் பெரும் பயன் எய்தி வருகின்றனர்.

கமலாலயம் தென்கரையில் துருவாசர் தவஞ்செய்த தாகக் கூறப்படும் ஒருகோயில் உண்டு.

கமலாலயத்தின் நடுவில் நடுவணநாதர் கோயில் விளங் குகிறது; மிக அழகிய திருப்பணி; சிறிய கோபுரம்; நடுவணநாதர் சிவலிங்கத் திருமேனி கொண்டவர். அவ ருக்குக் காலையிலும் மாலையிலுமாக இருகால பூஜைகள் நடைபெறுகின்றன. பிரதோஷ காலங்கள் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன.

கமலாலயம் கீழைக்கரை வடகோடியில் மாற்றுறைத்த விநாயகர் கோயில் இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் விருத்தாசலத்தில் மணிமுத்தாநதியில் இட்ட பொன்னைக் கமலாலயத்திலே தேடி எடுத்துத்தான் வைத்திருந்த மச்சப் பொன்னைக் (அடையாளப் பொன்) கொண்டு விநாயகப் பெருமான் உதவியால் உரைத்து ஒப்பு நோக்கினர். அப் போது மாற்றுக்குறைய இறைவனைப்பாடி மாற்றுப் பெற்றார். இந்நிகழ்ச்சியை அறிவிக்கும் குறிப்பு ஏழாந்திருமுறையில் 'மாற்றெனக்கு வைத்தானை' என்பதாகும்.

மாணிக்கநாச்சியார்கோயில் என்ற ஒன்று கீழைவீதி வடகோடியில் உள்ளது. மாணிக்கநாச்சியார் பதியிலார் (பரத்தையர்) குலத்துப் பிறந்தும் ''என் கொங்கை

நின்னன்பர் அல்லார் தோள்சேரற்க'' என்ற உறுதிப்பாடு கொண்டவர். பணம் பெற்று மனம் ஒத்த பிறகு அன்று பணம் கொடுத்தவரையே பதியாகக் கொள்ளும் பிறழா ஒழுக்கம்உடையவர். இறைவன் இவருடைய நெறித் தொண்டைக் உலகினர்க்குக் காட்டக் கிழ வேதிய உருவங்கொண்டு உருத்திராக்கத்தைக் கையுறையாகக் கொடுத்துக் கலந்திருந்து, சிறிது நேரஞ்சென்றபின் மூப்பாற் காலன் வாய்ப் பட்டவர் போலனுர். நாச்சியார் அன்றைய நாதனை இழந்த துன்பத்தால் வருந்தி உடன்கட்டை ஏறத்துணிந்து ஆயத்தமானுர். ஒழுக்கத்தின் சிறப்பை உலகிற்குக் காட்டினுர். இறைவன் இடபாரூடராகக் காட்சிவழங்கிப் பேரின் பமடைவித்தனர். இப்பொழுதும் தியாகப் பெருமான் திருத்தேர் புறப்படுங்காலை மாணிக்கநாச்சியார் அர்ச்சனையொன்று அவர்கள் மரபினர்களால் நடைபெறும் என்றும் பின்னர்தான் வடம்பிடிக்கப்பெறும் என்றும் சொல்லப் பெறுகின்றது. இது ஒரு சிறந்த திருக்கோயில்.

திருவாரூர்ப் பூங்கோயிலையடுத்து அதன் சார்பான தலங்கள் பல உள. அவற்றுள் திருப்பள்ளிமுக்கூடல், இராமகயா திருவிளமர், அலிவலம், புலிவலம் வந்தோமிப் பாலை (வண்டாம்பாலை). பெரும்புகலூர், மருதம்பட்டினம், கடாரங்கொண்டான் முதலிய தலங்கள் மிக்க விளக்க முடையன. அவற்றுள் திருப்பள்ளிமுக்கூடலும், திருவிளமரும் பாடல்பெற்ற சிவதலங்கள். திருவாரூர்ப் பூங்கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்தவை. இவற்றின் தொடர்பை விளக்கும் வரலாறுகள் மிக விரிவு வாய்ந்தன. அவற்றை அவ்வவற்றிற்குரிய தனித்த வரலாறுகளிற் காண்க.

# தீர்த்தங்கள்

இத்தலத்துள்ள நீர்நிலைகள் யாவும் சிறந்த தீர்த்தங்களே.

**கமலாலயம்:—** சிறந்த தீர்த்தம்; தேவதீர்த்தம்; இது கமலாலயம் என வழங்குகிறது. இது திருக்கோயிலின் மேற்குப் பக்கத்திலுள்ளது. இது ஐந்து வேலி பரப்பு உள்ளதாகப் புராணம் கூறுகிறது. "கோயில் ஐவேலி, குளம் ஐவேலி, ஓடை ஐவேலி" என்பது வழங்கும் பழமொழி. "அஞ்சணை வேலியாரூர் ஆதரித்திடங்கொண்டார்" என்பது அப்பர் திருவாக்கு. "குளம் வாலி மதில் ஐவேலியாம் திருவாரூர்த் தியாகர்" என்பது திருவாரூர்க்கோவை. "ஆலய மாதியோ ரொன்றை வேலிகொண்ட பெம்மான்" என்பது தியாகராஜலீலை நாட்டுப் படலத்துப் (140-ஆம் பாடற்பகுதி. இத்தீர்த்தம் 64 கட்டங்களையுடையது. கட்டங்களின் பெயரும் அவற்றில் மூழ்குவார் அடையும் பயனும், மூழ்குவார் செய்யவேண்டிய ஜபம், தானம் முதலியனவும் அந்தந்தக் கட்டங்களிலேயே குறிக்கப் பெற்றுள்ளன. இவற்றின் விரிவு விரிவான வரலாற்றுள் காணலாம். இந்தக்கட்டங்களுள் தேவதீர்த்தக் கட்டம் சிறந்தது. அது மாற்றுறைத்த விநாயகருக்குப் பக்கத்தில் மேலைக்கோபுரத்திற்கு எதிரில் உள்ளது. இதில் திரிசங்கு மன்னன் மூழ்கி இந்திரனால் உண்டான இடையூறு நீங்கித் தேவனானான்.

**சங்கதீர்த்தம்:** இது ஆயிரக்கால் மண்டபத்தின் அண்மையில் உள்ளது. ஒரு துரவுபோல் இருக்கிறது. மிக ஆழமானது. இது அமுததீர்த்தம் எனவும் வழங்கும். இதில் சங்க முனிவர் என்பார் நீராடித் தனது அறுபட்ட கையைத் திரும்பப் பெற்றார் என்பது வரலாறு.

**கயாதீர்த்தம்:** இது திருக்கோயிலுக்குக் கிழக்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இதன் கரையில் விசுவநாதர்

ஆலயம் ஒன்றுண்டு. இக்காலத்துக் கேக்கரை என வழங்கும். இன்றைக்கும் பலர் பிதிரர்களுக்குச் செய்யும் கடன்களை ஆற்றி வருகின்றனர். செய்ந்நன்றி மறந்த பேய் ஒன்றின் பாவம் இத்தலத்தில் நீங்கியது.

*வாணிதீர்த்தம்:—* இது மேற்கு பெரிய பிராகாரத்துள்ளது. சித்திரசபா மண்டபத்துக்கு எதிரில் இருக்கிறது. சரஸ்வதி தீர்த்தம் என வழங்குகிறது. தசரதன் இதில் மூழ்கித் தன் ஊமைத்தன்மை நீங்கினன் என்பது வரலாறு.

இதுவன்றிச் செங்கழுநீர் ஓடை ஒன்று திருக்கோயிலின் கீழைச்சந்நிதியில் சுமார் 2–பர்லாங் தூரத்தில் உள்ளது. அது இப்போது விரிந்த ஓடையாக இல்லை. பெரும்பகுதியும் வயலாகவும், மேடாகவும் ஆய்விட்டது. ‘ஆம்பலம் பொய்கை’’ எனத் தேவாரத்துச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இத்தலத்துச் செல்லும் ஆறு ஓடம்போக்கியாறு. இது கபில தீர்த்தம் எனப் புராணத்து வழங்கும். இவ்வாறே மூன்றரைக்கோடி தீர்த்தங்கள் இங்கு இருப்பனவாகத் தல புராணங்கள் அறிவிக்கின்றன.

## சிற்பச் சிறப்புக்கள்

இத்திருக்கோயிலில் அருமையான கருங்கல் வேலைப் பாடுகள் விளங்குகின்றன. பல, அரசர் காலத்துச் செய்யப் பெற்ற சிற்பத் திறங்களைக் காணலாம். இரண்டாம் பிராகாரம் வடக்குப் பக்கத்தில் விஸ்வகர்மேசம் என்ற ஒரு கோயில் உண்டு. அது (விஸ்வகர்மாவின்) சிற்பியின் சிற்பத் திற்கென்றே இயற்றப்பெற்றிருக்கவேண்டும். கொடுங்கைகளும் சிறுதூண்களும் நேர்த்தியான வேலைப்பாடுள்ளவை.

கீழைக்கோபுரத்திலுள்ள துவாரபாலகர் திருவுருவம் மிக நயப்பாடு அமைந்த இழைப்பு வேலையால் இயற்றப் பெற்றது.

கமலாம்பாள் கோயிலிலுள்ள ஆறுமுகக் கடவுள் திருவுருவமும், வடக்குக் கோபுரத்துள்ள கருணாகரத் தொண்டமான், அகோர பண்டாரம் உருவங்களும் மிக அழகானவை.

திருக்கோயிலுள் சந்திரசேகரர் சந்நிதியில் இத்தலத்தின் க்ஷேத்திரவரபுரம் என்ற பெயர்க் காரணத்தை விளக்கும் சிற்பமும், விஷ்ணு, இந்திரன் இருவரும் தியாகரைப் பூசித்த உருவமைந்த சிற்பமும் மேல் உத்தரப் பத்தியில் அமைந்துள்ளன.

வன்மீகநாதர் சந்நிதியிலுள்ள நந்தியப்பெருமானின் மேற்பரப்பிலுள்ள பாவு கல்லில் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் இராசிச் சக்கரமும் அமைந்துள்ளன.

உள்வடக்குப் பிரகாரத்தில் யாளி வாயிலிருந்து தொங்கும் கற்சங்கிலி நல்ல வேலைப்பாடுள்ளது.

விட்டவாயிலுக்கு அருகில் விளங்கும் கற்றேரும் கன்றும், பசுவும் காட்சிக்குரியன. சரித்திரத்தொடர்புடையன. கற்றேர்ச் சக்கரங்கள் ஒட்டுக்கல் வேலையாயினும், ஆரக்கால் முதலியனவும் அமையத் தோண்டியிருப்பது ஒரு தனியழகாம். கன்றையிழந்த பசுவின் கீழ்நோக்கிய பார்வை கவலைக்குறியின் எண்ணத்தை யாருக்கும் உண்டாக்கும். ஆயிரக்கால் மண்டபத்துள்ள உள் தூண்கள், ஐந்து இடங்களில் மேற்பரப்புக் கல் கொடுங்கை முதலிய பூ வேலைப்பாடும், விரிவேலைகளும் செதுக்கு வேலைகளும் செறிந்தன.

## பித்தளைச் சிற்பம்

தியாகப்பெருமான் சந்நிதியில் மேல்மண்டபத்தின் ஒரு பகுதிக்கும், கல் தூண்களுக்கும் 1953-ம் ஆண்டில் பித்தளைத்தகடு சிற்பத் திறத்துடன் இடம் பெற்றிருக்கின்றது.

தெற்குத் திருவாயிலில் இரு மருங்கேயும் இந்திரன், முசுகுந்தன் உருவங்கள் சிறப்புடன் விளங்குகின்றன. வாயிலின் மேற்கல்லில் தலைக்குமேலாக திருமால் தியாக வள்ளலை மார்பிலமைத்து வழிபடுவதாக அமைந்துள்ள சிற்பம் செம்மையில் திகழ்கின்றது. இத்திருப்பணி சுமார் 10000 ரூபாய் செலவில் உள்துறை டிரஸ்டி திரு. V. S. தியாகராஜ முதலியார் அவர்களின் ஜனன தகப்பனுர் திரு. G. அரங்கனுத முதலியார் அவர்களால் செய்யப்பெற்றது.

# சித்திரம்

தலைசிறந்த சித்திரம்; மனதைக்கரைக்குஞ் சித்திரம்; உயிர் ஓவியம்போன்றது. தியாகராஜப் பெருமானுடைய தென்னந் திருவாசலுக்குப் பக்கத்தில் மகாவிஷ்ணுவினுடைய சயனத் திருக்கோலமும், அவருடைய மார்பில் தியாகராஜப்பெருமானும் விளங்குவது. அவ்வுருவம் கி. பி. 1943–ல் திருத்தியமைக்கப்பெற்றுக் கண்கவர் தன்மைத் தாகக் காட்சியளிக்கின்றது.

வன்மீகநாதர் கருப்பக் கிருகத்தைச் சுற்றிலும் தியாகேசப் பெருமானுடைய கருப்பக்கிருகத்தைச் சுற்றிலும் அணியொட்டி மண்டபங்களின் மேற்பாவு கல்விலும் இறைவனுடைய பல சமயங்களில் நேர்ந்த அருட்கோலங்கள் விளங்குகின்றன. அவற்றுள் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும், காளியின் வீர நடனமும் மிக்க அழகுடையன. இவைகள் யாவும் தென்னுட்டுக் கலைத்திறனுக்கு எடுத்துக் காட்டாக கி. பி. 1943–ல் எழுதப்பெற்றன.

அவ்வாறே சபாபதிமண்டபம் மேற்பரப்பில் (முகப்பில்) ஸ்ரீ தியாகராஜப் பெருமான், மகாவிஷ்ணுவின் மார்பில் விளங்குவது. திருவெண்காடு, பழனி, சிதம்பரம் முதலிய திருத்தலங்களின் தோற்றமும், முருகன், கணபதி, முதலி

யோர் திருவுருவங்களும், எழுதப்பெற்றுள்ளன. அவற்ரேடு தோத்திரப்பாக்களும் தோன்றுகின்றன. மண்டபத்திற்குள் மண்டப மேற்பரப்பில் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரிய சுவாமிகள், உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருவுருவங்களும், நால்வர் திருவுருவங்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள், வரலாறு முழுமையும் அறியத்தக்க பல திருவுருவங்களும் எழுதப் பெற்றுள்ளன. உத்தரவரியில் சிவ ஞானபோதச் சூத்திரங்களும், உய்யவந்த தேவநாயனர் அருளிய திருவுந்தியார் பாடல்களும் விளங்குகின்றன. இவையும், 1942-ஆம் ஆண்டு எழுதப்பெற்றவையே. மேலைக் கோபுரத்தை யடுத்து வெளிப்புறத்து ஒரு பக்கம் தொண்டின் உயர்வை எடுத்துக்கூறிக்கொண்டு சைவ வீரராகிய அப்பர் பெருமான் நிலைபெறும் வழியை உணர்த்தி நிற்பதும், ஒரு பக்கம் தியாக வள்ளலின் சிறப்பைத் தெளிவாக எடுத்துக்காட்டிச் சுந்தரர் பெருமான் நிற்பதும், பலரையும் ஆண்டவனடிப்படுத்தும் அழகிய சித்திரங்களாம்.

## சுதைச் சிற்பங்கள்


இவைகளையன்றிச் சுதைச் சிற்பங்களும் சிறந்து விளங்குகின்றன. மேலைக்கோபுரம் முழுதுமே சுதைச் சிற்ப நிலைக்களன் எனலாம். தேவர்கள் பாற்கடல் கடைந்த வரலாறு. சண்டேசர் மணலாற் சிவலிங்கம் அமைத்து வழிபட்டது முதலிய புராண வரலாறுகள் அழகுபெற அமைக்கப்பெற்றுள்ளன. மேற்படி கோபுரத்தின் 2-ஆம் பத்தியில் மஹாசதாசிவசிவமூர்த்தியின் திருவுருவம் விளங்குகிறது. கமலாம்பிகை கோயிலில் சந்நிதியில் யாழும், வீணையுந்தாங்கி அநிந்திதையும் கமலினியுமாகிய தோழியர் இருவரும் தொண்டு செய்கின்றூர்கள். கமலாம்பிகை கோயில் கோபுரம் மேற்றனத்தில் தெற்குப் பார்க்கச் சட்டைநாதர் எழுந்தருளியிருக்கிருர். திருமகள் திருவுருவமுஞ் சுதையாலானதே; ஆயினும் தெய்வக்கலை சிறந்து

விளங்குவது. இன்னும் தேவாசிரிய மண்டபம் முதலிய இடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப் பெற்றுள்ளன.

இத்தலத்திற்கு நான்கு தேர்கள் உள்ளன. தேரழகு இந்தத்தலத்திற்கே உரியது. ''வேதாரணியம் விளக்கழகு, திருவாரூர்த் தேரழகு, திருவிடைமருதூர் தெருவழகு'' என்ற பழமொழியும் ஒப்ப உணர்தற்குரியன. திருவாரூர் தேர் உயரம், பருமன், கட்டுமானம், அலங்காரம், ஓட்டம், மூலைகள் திரும்பும் வன்மை எல்லாவற்றிலுந் தனியழகு படைத்ததேயாகும்; தியாகராஜப் பெருமான் 'ஆழித்தேர் வித்தகரை யாம்கண்டதாரூரே' எனத் தேரோடு சேர்த்தே சிறப்பிக்கப் பெறுவார்; ஆனால் தேர்ச் சிறப்பைக் கூறவா முடியும்! இத்திருக்கோவிலுக்குச் சொந்தமாகப் பெரிய வெள்ளி இடப வாகனம் ஒன்றுள்ளது. அது புதுக்கோட்டை ஆச்சியால் செய்து வைக்கப்பெற்றது. வெள்ளியாலான பெரிய யானை வாகனம் ஒன்றுள்ளது. அது ராஜாங்கக் கட்டளையால் செய்து வைக்கப்பட்டது. திருக் கோயிலுக்குச் சொந்தமான வெள்ளி மஞ்சங்களும், இரத்தின சிங்காதனமும், வயிரத்திருவாசியும், வீர கண்டயங்களும் இருக்கின்றன. மரத்தாலான கைலாச வாகனம், மயில் பூதம் முதலிய வாகனங்களும் உள்ளன.

தியாகேசர் சன்நிதியில் தேர் விளக்கு ஒன்றுள்ளது. அது தேர் வடிவமாக இருக்கும். விருக்ஷ விளக்கு எனப் பெறும். மர வடிவமான விளக்குகள் இரண்டும், கிளைத் தீபங்களும், சரவிளக்கு, கரணை விளக்கு முதலியவைகளும் உள்ளன. கமலாம்பாள் சந்நிதியில் பாவை விளக்குகள் நான்கு உள்ளன. இவற்றுள் தேர் விளக்குகள் மிக அழகு வாய்ந்தவை. தியாகேசர் திருமுன் உள்ள துவார பாலகர்கள் செப்புத் திருமேனி வாய்ந்தவர்கள். இவை சிறந்த சிற்பத் திறம் தெறிப்பனவாகும். திருக்கோயிலுக்குச் சொந்தமாகச் சுமார் ரூபா. 1,00,000-க்கு மேற் பெறுமானமுள்ள திருவாபரணங்கள் உள்ளன. அவற்றுள் தியாக பெருமா

"விண்ணவர் தொழநின்ற வீதிவிடங்கன் திருத்தேர்"



CONNEMARA PUBL
26 APR 197
MADRAS

தேர்

னுக்குச் சாத்தப்பெறுந் தலைமாலையும் பொற்கவசமும் வைர வீரகண்டயமும் மிக அழகும் பெருமானமும் உள்ளன. குடை, கொடி, ஆலவட்டம், வளை, தடி முதலிய எடுபிடிகள் பலவும் இருக்கின்றன.

இத்தலத்திற்குத் தனிச் சிறப்புடைய வாத்தியம் பஞ்ச முக வாத்தியம். இது, திருத்துறைப்பூண்டிக் கோயிலிலும், இங்குமே உள்ளது. இங்குள்ளதே பெரியதும், அமைப்பான தும், ஸ்வர சப்தமுள்ளதுமாகும். இதன் சுற்றளவு நான்கு அடி, எட்டு அங்குலமாகும். இதற்கு ஐந்து முகங்கள் உள் ளன. ஒன்று பாம்பு சுற்றினாற்போல் அமைந்துள்ளது. ஒன்று ஸ்வஸ்திகா அடையாளமுடையது. ஒன்று தாமரைப்பூஅடை யாளமுள்ளது. ஒன்று ஒரு அடையாளமுமில்லாதது, சுத்த மாகவுள்ளது. நடுவிலுள்ளது பெரியதாகவிருக்கும். அது, மேலே மான் தோலால் கட்டப்பெறும். இதனை அடிப்பவர்கள் பார சைவர்கள். இவ்வாத்தியம் ஒவ்வொரு முகத்திலும்தனித் தனியாக அடிக்கப்படும்போது ஏழு முறையும், ஐந்தினும் சேர்த்து அடிக்கும்போது முகத்திற்கு ஒன்றுக ஐந்து முறை யும் அடிக்கப்பெறும். இவ்வாத்தியம் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலிருந்து வந்ததாகவும், நடனகாலத்தில் நந்திதேவர் வாசிப்பாரென்றும், பிறகு அவர் ஸ்தானத்தில் பார சைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்றும் பஞ்சமுக வாத்திய லக்ஷணம் என்னும் வடமொழி நூல் கூறு கின்றது. இதில் பார சைவர்கள் உற்பத்தியும், அவர்களுக் குச் செய்ய வேண்டிய தீக்ஷை முறைகளும், பஞ்சமுகவாத் தியம் அடிக்கப்படுவதால் ஆகும் பயனும் நன்கு அறிவிக்கப் பெற்றுள்ளது.

இங்கு வாசிக்கப்பெறும் நாதஸ்வரம் மிகப்பெரியது, பாரிநாதஸ்வரம் என்றே வழங்கும். விழாக் காலங்களிலுங் கூட வீதிகளில் இன்ன இன்ன இடத்து இன்ன இன்ன பண்கள்தான் வாசிக்க வேண்டும் என்ற மரபுண்டு.

அம்முறை அந்த இனத்தார்களுக்குள்ளேயே வழக்கமாகவும், இரகசியமாகவும் வைக்கப்பெற்று வருகிறது.

இங்குள்ள பணியாளர்களுள் திருமேனி தீண்டுவார், நயினுர், சைவச் சுருதித் தலைவர் என்றும் (உலா 69) அணுக்கத் தொண்டுசெய்வார் பிரமராயர் என்றும், (உலா 70) மணித் தண்டு தாங்குதல், மெய்க்காவல் முதலியன செய்வார் விழிப்பெருமர் கூட்டத்தார் என்றும், அகக்கோளர் என்றும் இலக்கியங்களில் அழைக்கப்பெறுகிருர்கள். ஆதி சண்டேசுவரர் திருவாணையைத் தலைமேல் தாங்கி, விழா அறிவிக்கும் விழுப்பறையருக்கு யானை ஏறும் பெரும்பறையர் என்று பெயர். இந்திரனே இத்தொண்டை மேற்கொண்டிருப்பதாகப் புராணவரலாறு கூறுகின்றது.

## புராண வரலாறு

தலம்:— சுந்தரமூர்த்திகள் திருதொண்டத் தொகை தர, அடியார் பெருமையை விளக்கியது இத்தலமே. இத் தலத்துப் பிறந்தார்கள் அனைவரும் சிவகண நாதர்களாகத் திகழ்கின்றனர். ''திருக்கயிலை வீற்றிருந்த சிவ பெருமான் திருக்கணத்தார், பெருகியசீர்த் திருவாரூர்ப் பிறந்தார்கள் ஆதலினுல்'' எனப் பெரியபுராணம் பேசுகிறது. இது பிறக்க முத்திதரும் தலம். பூமிதேவிக்கு மூலாதாரத் தானமாய் இருப்பது. 'நிறைசெல்வத் திருவாரூர்.' ''தேராருந் திருவாரூர்'' என்பன திருவாரூரின் பலதிறப்பட்ட சிறப்பினை யறிவிக்குஞ் சான்றுகள். இத்தலம் திருமகள் தவஞ்செய்து பேறுபெற்றது. கலைமகள் தவஞ்செய்தது: கமலைபராசத்தி என்னும் பராசத்தி தவம்புரிவது. பரவை நாச்சியாருடைய அவதாரத் தலம். முசுகுந்த சோழன் ஆண்டது. அன்பர்கள் தம் மனதிலே ஆரூரை நினைக்கின்ற காலத்து மனுமன்னன் செங்கோல் ஆட்சிமுறைதான் முன்னெழும் எண்ணமாக

இருக்கும். சோழர்களுடைய தலைநகரங்களுள் சிறந்து விளங்குவது மிதுவே.

இத்தலத்திற்கு க்ஷேத்திரவரபுரம் என்றும் ஒரு பெயருண்டு. பிரமன் தன் படைப்புத்திறம் தோன்றத் தான் படைத்த தலங்கள் எல்லாவற்றையும் ஒரு தட்டிலும் இதனை ஒரு தட்டிலும் இட்டுச் சீர்தூக்கினான். மற்றத் தலங்கள் இதற்கு ஒரு சிறிதும் ஒத்தனவாயில்லை. அதனால் இப்பேர் பெற்றது.

இறைவன் ஆடகேசர் என்னுந் திருநாமத்தோடு ஞானசுந்தரியம்மையுடன் அநாதியே எழுந்தருளியுள்ள ஆடகேசத்தை உடைமையால் இத ஆடகேசுரபுரம் என்றும் ஒரு பெயர் வழங்கப்பெறும்.

அவ்வாறே தேவர்கள் பலரோடு பிரமன் யாகஞ்செய்த காரணத்தால் தேவயாகபுரம் என்றும், முருகன் தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருள்புரிந்து காத்து வருதலால் கந்தபுரம் என்றும், முசுகுந்த சோழன் இந்திரனிடமிருந்து தியாகேசரைப் பெற்று இங்குக் கொண்டுவந்து நிறுவித் திருவிழா முதலியன செவ்வனே நடத்தி அருள் பெற்றமையால் முசுகுந்தபுரம் என்றும், சனற்குமாரர் முதலிய முனிவர்கள் கலியுகம் வருவதற்கஞ்சி வருந்தப் பிரமன் ‘‘இத்தலம் சென்று இறைவனைப் பூசித்தால் கலி வருத்தம் நிகழாது’’ என்றுகூற, அவ்வாறே வந்து புற்றிடங்கொண்டாரைப் போற்றக் கலி அங்குவர அஞ்சி வராமையின் கலிசெலா நகரம் என்றும் பெயர்கள்வந்தன. இன்னும் இறைவன் இறைவியோடு அநாதி காலந்தொட்டுப் பூமியின் கீழ் யார்க்கும் அறிவரிய திருவுருவாய் அமர்ந்திருத்தலின் அந்தரகேசுபுரம் என்றும், இந்திரன் உண்டாக்கிய புற்றில் பெருமான் இடங்கொண்டு எழுந்தருளினமையால் வன்மீக நாதபுரம் என்றும் வன்மீகநாதரைத் தேவர்கள் எப்பொழுதும் வழிபடுதலின் தேவாசிரியபுரம் என்றும், சமற்

காரன் என்னும் அரசன் நகர் எடுப்பித்துக் காத்து வந்தமையால் சமற்காரபுரம் என்றும், விராட்புருடனுக்கு மூலாதாரமாக இருத்தலின் மூலாதாரபுரம் என்றும், திருமகளும், நிலமகளும் வழிபட்டுப் பேறு பெற்றமையின் திருவாரூர் என்றும், கமலாலயபுரம் என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. இத்துணைப் பெயர்களிருப்பதே இத்தலத்தின் சிறப்பிற்கு ஏற்ற சான்றாகும்.

*தொன்மை:—* "இத்தலந் தொன்று தொட்டுள்ளது; ஆண்டவன் எழுந்தருளப் பெற்றது" என்று புராணம் அறிவிக்கின்றது. அன்றியும் அப்பரடிகள் ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்ற திருதாண்டகத்துக் "கோலமே நீ கொள்வதற்கு முன்னோ பின்னோ" "நிலந்தரத்து நீண்டுருவம் ஆன நாளோ" என்பன போன்ற பல பகுதிகள் இறைவன் நம்மீது வைத்த கருணையினால் அருவுருவத் திருமேனிகள். உருவத் திருமேனிகள் கொண்டு எழுந்தருளிய முதல் இடம் இத்தலமே என்று அறிவிக்கின்றன.

*வழிபட்டார் எய்தும் பேறுகளும் பிறவும்:—* தேவலோகத்திலுள்ள மூன்றரைக்கோடி தீர்த்தங்களும் பெருந்தவஞ்செய்து தியாகேசன் திருவருளால் இத்தலத்தையடைந்தன. இத்தலத்தில் சிவலிங்கப்பிரதிட்டை முதலிய சிவபுண்ணியம் செய்தவர்கள். இம்மையில் எல்லாப் போகமும் இனிது துய்த்து, மறுமையில் நிரதிசயானந்தப் பெரும்பேறு எய்துவர். இத்தலத்து இருந்து மந்திர ஜபம் செய்பவர்கள் ஒன்று பத்தாகப் பலன் ஏறுவதால் அருள் மிகப் பெறுவர். தானம், தருமம் முதலியன செய்வோர்களும் வானுலக இன்பத்தை வெறுத்துச் சிவஞானப்பேறு எய்துவர் என்று புராணம் கூறுகின்றது. எண்ணில்லாத பாவங்களைச் செய்தவர்களும் இத்தலத்தையடைந்தால் முத்திபெறுவது துணிவு. இழிகுலத்தவர் இத்தலத்துவரின் சிந்தை தூய்மையுற்றுத் தொழுகுலத்தவ

ராவர். இத்தலத்தை ஒருமுறை நோக்கினாலும், அடைய எண்ணினாலும், தீண்டினாலும் இடையருப் பிறவிக்கடல் நீங்கி இன்ப வாழ்வு எய்தும், ஆதலால் இத்தலத்திற்கு ஒத்ததும் உயர்ந்ததும் இல்லை என்றும், ''இணை இதற்கு இஃதேயாகும்'' என்றும் இயம்புகிறது திருவாரூர்ப் புராணம். ''பிறந்தால் முத்திதரும் தலம்'' என்பதனால் பல அன்பர்கள் இத் தலத்து இடைவிடாது பத்து மாதம் தங்கி அப்பேற்றினை அடைவர். இது 'கர்ப்பவாசம், என்று இத்தலத்துச் சிறப்பில் பாராட்டப் பெறுகின்றது. இத் துணைச் சிறப்பையும் ஒருசேரத் தெரிவிக்கின்றது. ''வானவர்கள் துதிசெய் தேத்துந் திக்கெலாம் நிறைந்த புகழ்த் திருவாரூர்'' என்ற அருள் வாக்கு.

*வன்மீகநாதரைப் பற்றிய வரலாறுகள்:—* முற்காலத்தில் திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் ஒருங்கு கூடி ஒருயாகம் செய்ய எண்ணினர். குருக்ஷேத்திரமே தக்க இடம் என்று துணிந்தனர். இந்த யாகத்தை இறுதிவரையில் இளைக்காமல் இயற்றுபவரே எல்லாரிலும் உயர்ந்தவரென்று சபதம் செய்தனர். அவ்யாகத்தில் இந்திரன் முதலியோர் தோற்றனர். விஷ்ணுவென்றார்; செருக்குற்றார். அதை அடக்க முன்னவன் அருளால் ஓமகுண்டலத்தில் ஒரு வில் உண்டாயிற்று. அதனை எடுத்து வளைத்துக் கொண்டு தேவர்கள் எல்லோரையுமே அடக்கியாள எண்ணி அவர்களைத் துரத்திச் சென்றனர். பராசத்திபுரம் என்னும் இத் தலத்தை யடைந்தார். இறைவி திருவருளால் அவர் வலியெலாம் ஒடுங்கியது. வில்லைத் தரையிலூன்றி அதன் மேல் தன் தலையைச்சாய்த்து அயர்ந்து அறிவுசோர்ந்தார். சமயம் நோக்கிய தேவர்கள் தமது குருவாகிய வியாழனை ஆலோசனை கேட்டனர். அவர் உத்தரவுப்படி தேவர்கள் யாவரும் வில்லின் கீழ்ச் செல்லுருவமாகிப் புற்றில் அமர்ந்து நாணை அரித்து, அறுத்தனர். அப்போது வில் நிமிர விஷ்ணுவின் தலை தெறித்தது. தேவர்கள் அஞ்சினர், ஆடகேசத் திருநாமத்தோடு பாதாளத்து எழுந்தருளிய

பரமன் புற்றிடங்கொண்டு சிவலிங்கமாகக் காட்சி தந்தார். இந்திரனும், பிரமனும் வணங்கித் தோத்தரித்தனர். இறைவன் சிவலிங்கத் திருமேனியிலிருந்து வெளிப்படத் தேவர்கள் வழிபட்டனர். அபயம் கூறினர். இறைவன் செருக்குக்கொண்ட திருமால் தலையை உடலோடு பொருத்துங்கள் என்ன, அவ்வாறே செய்து, அத் திருமாலையும் பெற்றனர். பின்னர்த் திருமால் முதலிய தேவர்கள் ஆகம முறைப்படி வழிபாடு செய்து எல்லா இன்பங்களையும் எய்தினர். இதுவே புற்றிடங்கொண்ட பெருமானது தோற்ற வரலாறு என்று கூறப்படுகின்றது.

மற்றும், திருமகள் கடலரசனாகிய வருணனிடத்து வளர்ந்து வந்தாள். திருமால் மதுகைடபர் என்ற அசுரர்களை வென்ற வரலாற்றைக்கேட்டு அவரையே மணந்துகொள்ளவேண்டும் என்று இத்தலம் அடைந்து திருமூலட்டானேசுவரரை வழிபட்டுத் தவம் செய்து வந்தனள். இறைவன் காட்சி தந்து அவ்வாறே வரமீந்தனர். திருமகள் என் பெயரால் இந் நகரம் வழங்கவேண்டும் என்ற வரமும் கேட்டனள். அது முதல் இத்தலம் கமலாலயம் என்று அழைக்கப்பெறுகிறது. ஒரு காலத்தில் கோடி முனிவர்கள் வந்து தரிசித்தபொழுது வன்மீகநாதர் கோடியளவான திருவுருவங்களைக்கொண்டு காட்சியளித்தனர். முனிவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி வழிபாடாற்றினர். சிவப்பேறெய்தினர்.

திலீபன் மகனாகிய அசன் என்னும் அரசன் நால்வகைச் சேனையுமின்றி அரசாளும் முறை என்ன என்று தன் குல குருவாகிய வசிட்டனை வினவினான். அதற்கு அவர் "திருவாரூர் சென்று வன்மீகநாதரை வழிபட்டு அவரருளால் துர்க்கையை நிலைபெறுவித்து வழிபாடு செய்யின் முடியும்" என்று கூறினர். அசன் அவ்வாறே செய்தான்.

அசன் மகனுகிய தசரதன் ஆட்சிக்காலத்தில் உரோகிணி நட்சத்திரத்தை ஊடறுத்துச் சனி செல்வதைச் சோதிடர் மூலமாக அறிந்து சனியைத் தடுக்கலானச் சனி மண்டலத்தை அடைந்தான். சனியைக்கண்டு தேவரீர் ''உரோகிணியை ஊடறுத்தால் உலகம் பஞ்சம் எய்தும்; ஆதலால் நூற்றுநான்கு யுகம் வரையும் உரோகிணியை ஊடறுத்தல் ஆகாது; என் வார்த்தையை மீறின் என் வாளுக்கு இறையாவீர்'' என்ருன். சனி கருணைகூர்ந்து அரசன் துணிவைக்கண்டு மெச்சி அவன் வேண்டிய வரத்தையும் மற்றும் பல வரங்களையும் கொடுத்தான்.

இதனையறிந்த இந்திரன் தசரதன் நட்பைப்பெற வேண்டித் தன் உலகிற்கு அழைத்து விருந்தியற்றி உனக்கு ஏதாவது குறையுளதோ என்ருன். என்னரசாட்சி இனிமையாய்ச் செல்லுகின்றது; ஆனுல் பிள்ளையில்லாக்குறை பெரிதாயிருக்கின்றது என்ருன். ''அப்படியாயின் கமலாலயம் சென்று வன்மீகநாதரை வழிபட்டால் நீ எண்ணியது எய்துவாய்'' என்ன, தசரதன் அவ்வறே வந்து வழிபட்டு இறைவன் அருள்பெற்றுச் சென்று யாகஞ்செய்து இராமன் முதலிய நால்வரையும் பெற்று இன்பம் எய்தினுன்.

அவ்வாறே சித்தீசன் என்னும் அரசனும் புத்திரப்பேறு எய்தினுன். குவிசேசன் என்னும் அரசன் பாரணைப் புண்ணிய காலத்துத் துருவாச முனிவருக்கு ஊன் கலந்த சோற்றையிட்டான். துருவாசகர் சபித்தார். அச்சாபத்தை இத்தலத்து வன்மீகநாதரை வழிபட்டுப் போக்கியுய்ந்தான். அவ்வாறே மன்மதன் மேனகை முதலியவர்களும் வழிபட்டுச் சாபம் நீங்கினர். பசுவைத்தேடிக்கொண்டு வணிகன் ஒருவன் வன்மீகரை வலம்வர அதனுல், மறுமையில் மன்னனுயினுன். இராமன், குசன், லவன், சமற்காரன் என்னும் அரசன், கோகருணர் என்னும் முனிவரொருவர், கேமசருமன் முதலியவர்களும் வழிபட்டுப்பேறு பெற்றனர்.

*தியாகேசர் வரலாறு:—* திருமால் தனக்கு ஒரு அழகிய மகன்வேண்டுமென்று விரும்பினர். குறையெல்லாம் நிறைவிக்கும் பெருமானிடம் வேண்டிக் கடுந்தவம் மேற்கொண்டார். வெயிலிலும், மழையிலும் பெரிய நீலமலைபோல அசையாது நின்று கடுந்தவஞ் செய்தனர். அதன் பயனாக இறைவன் திருவருட்சத்தியோடு வெளிப்பட்டனர். கண்ட திருமால் துண்ணெனத் திடுக்கிட்டு, ''இறைவ! வேண்டுவார்க்கு வேண்டுவதே யீயும் விண்ணவர் தலைவ! அடியேனும் தேவரீர் திருவருளால் உலகப் பாதுகாப்பு முதலிய எல்லா நன்மைகளையும் எய்தினேன், ஆயினும் பிள்ளையில்லாக் குறை பெரிதாயிற்று. அதனைத் தீர்க்க அழகிய புத்திர பாக்கியத்தை அருளுதல் வேண்டும்'' என்றனர். பெருமானும் பேரருள் கூர்ந்தார்; ஆனால் திருமால் இடப்பக்கத்து இருக்கின்ற உமாதேவியை வணங்கவில்லை. அதனால் உமாதேவியார் சிறிது சினங்கொண்டு ''இறைவன் திருவருளால் நீ புத்திரனை யெய்தினும் அவன் விதிவலியால் வலிய அழிக'' என்று சாபங்கொடுத்துப் பின்பு பெருமானையும் அழைத்துக்கொண்டு விரைந்து மறைந்தருளினர். திருமால் கவன்று, செய்வது இன்னதென்று அறியாது நிற்கையில் திருவருள் உண்ணின்று உணர்த்த ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணப்படியே சிவபெருமானையும், உமாதேவியாரையும், குமாரக் கடவுளையும் ஒரே ஆசனத்தில் எழுந்தருளுவித்து ஆகமவிதிப்படி அரிய பூசனை செய்து வந்தனர். பூசைக்குகந்த பெருங்கூத்தர் விடையின்மேல் அருள் உருக்கொண்டு வெளிப்பட்டுக் காட்சியளித்தனர். திருமால் கந்தனையும், அம்மையையும், அப்பனையும் முறையே வணங்கினர். மகிழ்ந்த மஹேஸ்வரி ''என் சாபம் தடைபடாது, ஆனால் நின்மகன் இறைவன் நெருப்புக் கண்ணால் வெந்து பின் பிழைப்பான்'' என்று சாபவிடை தந்தனள். மகிழ்ந்த திருமால் ''இதே சோமாஸ்கந்தத் திருக்கோலத்தோடு தேவரீர் எப்பொழுதும் எழுந்தருளி இன்னருள் புரிதல் வேண்டும். இந்த உலகம் முழுதும் உய்தல் வேண்டும்'' என்று வேண்டினர். அவ்வாறே



ஈசானமூர்த்தி

NEMARA PUBLIC LI

இறைவர் அருள் பாலித்தனர். பின்பு திருமால் தன் நெஞ்சக்கோயிலில் அம்மூர்த்தியை நிறுவி வழிபாடாற்றி வந்தனர். திருமாலின் நெஞ்சகத்து எழுந்தருளி உச்சுவாச நிச்சுவாசத்தால் (மூச்சுக்காற்றை உள்ளிழுத்தலும், வெளி விடுதலும்) ஆகிய அசைவால் பெருமானும் அசைந்தாடி ஆனந்தங்கொண்டு திருமாலுக்குத் திருவருள் சுரந்து விளங்கினர். இந்த நடனம் அஜபா நடனம் எனப்படும்.

அப்போது தேவலோகத்தை அசுரர்கள் சூழ்ந்து வருத்தத் தொடங்கினர்; கொள்ளையடித்தனர்; கொடுமை புரிந்தனர். இந்திரன் திருமாலைக் காணப் பாற்கடலை அடைந்து அவரிடம் நிகழ்ந்த யாவையுங் கூறினான். இந்தப் பெரிய துன்பம் எப்போது கழியுமோ? என் செய்வேன்! என்று ஏங்கினான். இரங்கிய திருமால் ''என் உயிருக்குயிராக இருக்கின்ற ஒரு பரம்பொருளைத் தருகின்றேன். அதனை நீயும் வைத்து அன்பு குறையாது பூசனை செய்துவந்தால், பெருமானருளால் வெற்றி கிடைக்கும்'' என்றருளிச்செய்து சோமாஸ்கந்த மூர்த்தியாகிய இறைவனையும் ஈந்தனர். பெற்றுக்கொண்ட இந்திரன் வழிபாடு செய்து அவுணர் வாதை அகலப் பெற்றான். அளப்பிலா மகிழ்ச்சியால் சோமாஸ்கந்த மூர்த்தியையும் வழிபட்டு வந்தனன்.

அப்போது திருவாரூர் செய்த பெருந்தவத்தால் மீண்டும் வலன் என்னும் அசுரன் ஒருவன் வானுலகில் படையெடுத்து வந்து இந்திரனோடு போர்செய்து தோற்றோடச் செய்தனன்.

இது இங்ஙனமிருக்க, பூமியில் நீர்வளம் செறிந்த சோழநாட்டின் தலைநகரமாகிய திருவாரூரில் முசுகுந்தன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் முற்பிறவியில் ஒரு குரங்காகத் திருக்கைலாயத்திலுள்ள பூஞ்சோலையில் சுற்றித் திரிந்தவன். இறைவனும், இறைவியும் எழுந்தருளியுள்ளபோது அவர்கள்மேல் வீழும் வண்ணம்

வில்வத் தளிரைச் சிந்திவந்தான். அருட்கடலாகிய இறைவன் அறியாது செய்த நற்செயலுக்கும் மகிழ்ந்து மறுபிறப்பில் அரசனாக உலகாளச் செய்தனர். அவனே சோழ அரசனாகிய முசுகுந்தனாக அவதரித்தவன். இம் முசுகுந்தன் இந்திரனுக்கு நட்பினன். திருவருள் கூட்டு தலால் இந்திரன் ' நம் துணைவனாகிய முசுகுந்தனை அழைத் துவரின் நம் பகை நீங்கும்; வெற்றி கிட்டும்'' என்றெண்ணி னன். தூதனையனுப்பி அழைத்துவரச்செய்து துணை வலி யாலும், பெருமான் திருவருள் வலியாலும் வெற்றிபெற்ற னன். மகிழ்ந்த இந்திரன் முசுகுந்தனை பூலோகத்துக்கு அனுப்பும்போது வேண்டிய வரிசைகள் வழங்கி ''மண் ணுலக மன்ன! இவ்வுலக வாழ்வு எனக்கு உன்னால் நிலைத்தது; உனக்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றும் தோன்றவில்லையே'' என்று உபசார மொழிகள் உரைத்தனன்.

விடைபெற்றுச் சென்று நீராடி பூசனை முற்றினன். புகழ் மாலைகளால் போற்றி நின்றனன். அப்போது முகுந்தனும் தனது கடன்களை முடித்துக்கொண்டு சென்று தியாகவிநோதரை, அரவக் கிண்கிணிக் காலரசரைக்கண்டு ஆனந்தப் பரவசனாய்த் தன்னைமறந்து சிவமேயாய்த் திளைத்து நின்றனன். அன்பு வலைப்பட்ட தியாகப்பெரு மான் இந்திரன் அறியாதபடியும் இவன் மட்டும் காணும் வண்ணமும் காட்சியளித்தனர். முசுகுந்தனுக்கு முற்பிற வியின் எண்ணங்களும் செயல்களும் முறையே நினைவிற்கு வந்தன. இன்ப வெள்ளத்து மூழ்கினன். இறைவன் இவன் காதிற்குமட்டும் கேட்க ''என்னைத் திருவாரூர்க் கொண்டுசெல்; பூசனைசெய்'' என்று ஆணை தந்தனர். அரசன் வழிபாடு முற்றி இந்திரனோடு அமுதருந்தியபின் விடைபெற விரும்பினன். இந்திரன் ''என்னிடம் வேண் டியது யாது? அதைக்கேள், தருகிறேன்' என்றனன். அப்படியாயின் '' நீ வழிபடும் தியாகப் பெருமானை அளித்திடுக'' என்று அரசன் வேண்டினன். இந்திரன்

"இம்மூர்த்தி என்னுடையதல்ல, திருமால் வழிபட்டது; அவரது அனுமதிபெற்றுத் தரல் வேண்டும்" என்றனன். அப்போது முசுகுந்தன் கேட்டாயினும் கொடுக்க வேண்டு கிறேன்; பெற்றன்றிப் போகமாட்டேனென்று வற்புறுத் திக் கூறினன். இந்திரன் அவ்வாறே பாற்கடல் சென்று திருமால் அனுமதியும் பெற்றுவந்தவனாய், ஆன்மார்த்த மூர்த்தியை அகல மனமில்லாதவனாய், அதுபோன்ற ஆறுமூர்த்திகளைச் செய்வித்து அரசனுக்குக் காட்டினன். திருவருள் துணைசெய்ய முசுகுந்தன் உண்மை உருவைத் தருக எனக்காட்டிக் கேட்டனன். இந்திரன் செய்வ தொன்றறியாது திகைத்துச் சிவப்பெருமூர்த்தியை அளித்தனன். முசுகுந்தன் அம்மூர்த்தியைத் திருவாரூர்க்கு எழுந்தருள்வித்தனன். வன்மீகர் திருக்கோவிலுக்குத் தென்பால் திருக்கோயில் அமைத்து அதில் அமர்த்தி அருளினன். அங்ஙனம் அவன் எழுந்தருள்வித்த நாள் அத்த நக்ஷத்திரம். ஆதலால் அன்று கொடியேற்றுவித்து விழாக் கொண்டாடினன். பங்குனி உத்தரத் திருநாளில் நீர்விழா நிகழ்த்துவித்தான், முதலில் திருமால் மார்பில் அசைந்தாடிய பெருமானை இருந்ததை "பையஞ்சுடர்விடு நாகப்பள்ளி கொள்வான் உள்ளத்தானும்" என்ற பகுதி யால் அப்பரடிகள் அறிவிக்கின்றார்கள். அது மட்டுமா? "தேங்காவி நாறும் திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயி லுள் மகிழ்ந்து போகாதிருந்தாரே" என்ற தேவாரப்பகுதி இன்றும் கண்கண்ட தெய்வமாகத் தியாகர் விளங்குவதை அறிவிப்பதாகும்.

இன்னும் தியாகர் செல்வத் தியாகரான சிறப்பு அடிக் காயிரம் பொன் கொடுத்தார் என்னும் வரலாற்றானும் பெறப்படும்; பொன் பரப்பிய திருவீதியென ஒரு வீதிக் குப் பெயர் வழங்கியதே இதற்கு ஒரு தக்கசான்று. இந் நிகழ்ச்சி உற்சவத்தில் தியாகப்பெருமான் தேருக்கு எழுந் தருளும்போது பொன் பூ, வெள்ளிப் பூ, இறைப்பதாக நிகழ்ந்து வருகிறது. "அடிக்கோராயிரம் பொன் சின்னங்கள்

கூற அளிப்பார்'' எனத் திருவாரூர்க் கோவையினும், ''அடி ஒன்றுக்கு, உய்யும்படி பசும்பொனேராயிர முகந்து, பெய்யுந் தியாகப் பெருமானே'' எனத் திருவாரூர் உலாவி னும் சிறப்பிக்கப் பெறுதல் காண்க.

சோமாசிமாற நாயனூர் தான் செய்யும் யாகத்தில் இறை வனே நேரில் வந்து அவிர்ப்பாகம் ஏற்றருளும்படி சுந்தர ரைக்கொண்டு வேண்டிக்கொண்டார் என்றும், அவ் வாறே இறைவன் உமையோடு பறையர் திருக்கோலமாக எழுந்தருளி ஏற்றுக்கொண்டார் என்றும் வரலாறு ஒன்று காணப் பெறுகின்றது. ஆனால் இவ்வரலாறு பெரிய புராணத்துக் கூறப்படவில்லை. திருக்கடவூர்த் தல புராணத் துக் கூறப்பெற்றுள்ளது. திருமாகாளத் தலபுராணம் துணை நிற்கின்றது. தியாகப்பெருமான் அவ்வாறு எழுந்தருளிச் சென்றதற்கு அடையாளமாக ஐயடி மங்கலம், அடியக்க மங்கலம், சகடமங்கலம், பொங்குசாராய நல்லூர் என்ற ஊர்ப்பெயர்கள் சான்று பகருகின்றன.

மனுச்சோழன் நீதியைக் காக்க — பசுத்துயரம் தான டையத் தேர்க்காலில் மகன் வீதி விடங்கனைக் கிடத்தித் தேருருட்டியபோது தியாகப்பெருமானே விடைமீது தோன் றிக் காட்சி வழங்கி உயிர்ப்பித்தார் என்ற வரலாறு பெரிய புராணத்துக் காணப்பெறுகிறது.

நமிநந்தியடிகள் கனவில் தியாகப்பெருமான் எழுந் தருளித் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவகண மாதலைத் தெரிவித்தனர் என்பதும் பெரிய புராணத்துக் காணப்பெறுவது. அவ்வாறே விறன்மிண்டர், கழற்சிங் கர் வரலாறுகளும் தியாகப்பெருமானுடைய திருவருள் தொடர்புடையன.

மற்றும், பச்சைக் கற்பூரம் அணிதலும், செவ்வந்தித் தோடணிதலும், செங்கழுநீர்மாலையணிதலும், இறைவ னுக்குச் சாத்தப்பெறும் ஆடையில் தியாகர் என்ற பெயர்

வரைதலும், பாகற்காய் பறித்தலும், தென்னத் திருவாசல் வழியாகப் பாடுவார் பாடல் கேட்டலும் தியார்க்குரிய வழக்கங்களாம்.

தியாகப்பெருமானுக்குரிய பத்துவகை அங்கப்பொருள் களுக்குத் தனிப்பெயர்கள் உண்டு. அவை ஆடுதண்டு— மணித்தண்டு, கொடி — தியாகக்கொடி, ஆசனம் — இரத் தின சிம்மாசனம், மாலை—செங்கழுநீர் மாலை, வாள் — வீர கண்டயம், நடனம்—அஜபா நடனம், யானை—ஐராவணம், மலை — அரதனசிருங்கம், முரசு — பஞ்சமுக வாத்தியம், குதிரை — வேதம். நாடு—சோழநாடு. ஊர் — திருவாரூர், ஆறு — காவிரி, பண் — பதினெண் வகைப்பண் என்பன வாம். இவற்றின் விரிவும் மேற்கோளும் தனிப் புத்தகத்தில் காணத்தக்கன.

தியாகப்பெருமானைப்பற்றி "அசைந்தாடி அகிலமும் ஆட்டுந் தியாகர்." "ஆடாதும் ஆடிப் பாகற்காய் பறிக்கும் தியாகர்" முதலிய பழமொழிகளும் வழங்கி வருகின்றன.

பெயர்கள்:— பல காரணங்களால் தியாகப்பெருமா னுக்கு வீதிவிடங்கர், தேவரகண்டப்பெருமான், தியாகப்பெருமான், ஆடரவக்கிண் கிணிக்காலழகர், செங்கழுநீரழகர், செவ்வந்தித் தோடழகர், கம்பிக்காதழகர், தியாக விநோதர், கருணாகரத் தொண்டமான், (இவை விருதாவளியில் உள்ளன. சோழ மண்டல சதகம் பார்க்க) அசைந்தாடும் அப்பர், அடிக் காயிரம் பொன் வழங்கியவர், கமலேசர், செம் பொற்றியாகர், திருந்திறைகோலத்தர், தேவசிந்தா மணி, தியாகசிந்தாமணி, சிந்தாமணி முதலிய அறு பதுக்கு மேற்பட்ட திருநாமங்கள் பிரபந்தங்களிலும், தேவாரத் திருமறைகளிலும் வழங்குகின்றன.

# வரவு செலவு

## இக்கோயிலின் வருமானம்
## 1377 பசலியில்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1 | அலுவலகம் & ஆலயம் | 24000 | 00 |
| 2 | அபிஷேக கட்டளை | 209800 | 00 |
| 3 | அன்னதான கட்டளை | 128000 | 00 |
| 4 | ராஜன் கட்டளை | 200000 | 00 |
| 5 | அர்த்தஜாம கட்டளை | 21370 | 00 |
| 6 | உள்துறை கட்டளை | 9736 | 00 |
| 7 | பாலாயி கட்டளை | 5800 | 00 |
| 8 | விஷுபுண்யகால கட்டளை | 2230 | 00 |
| 9 | பரிவட்ட கட்டளை | 100 | 00 |
| 10 | திருச்சாந்து கட்டளை | 65 | 00 |
| 11 | சுக்கிரவார கட்டளை | 18 | 00 |
| 12 | கற்பூரக் கட்டளை | 19 | 00 |
| | ஆக | 601138 | 00 |

## செலவு இனங்கள்
## 1377 பசலியில்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1 | அலுவலக சிப்பந்திகள் கோயில் சிப்பந்திகள் சம்பளம் | 88000 | 00 |
| 2 | சகாய தொகையும் தணிக்கை கட்டணமும் | 18750 | 00 |
| 3 | கரண்டு சார்ஜும் கண்டின்ஜெண்ட் செலவு முதலியவை | 25000 | 00 |
| 4 | பூஜை செலவு | 88700 | 00 |
| 5 | திருவிழாக்கள் | 62700 | 00 |
| 6 | தேர் ஓட்டல் | 15000 | 00 |
| 7 | மராமத்து செலவு | 10000 | 00 |
| 8 | பண்ணை சாகுபடி | 50000 | 00 |

| | | | |
|---|---|---|---|
| 9 | தளவாடம் பழுதுபார்ப்பது | 4500 | 00 |
| 10 | அன்னதான சத்திரம் | 5000 | 00 |
| 11 | விவகாரச் செலவு | 25000 | 00 |
| 12 | டிரஸ்டி அலவன்ஸ் | 4000 | 00 |
| 13 | சர்க்கார் கிஸ்தி | 17300 | 00 |
| 14 | நகரசபை வரி | 8000 | 00 |
| 15 | கட்டிடம் பழுதுபார்ப்பது | 16000 | 00 |
| 16 | கால்நடை பசுமடம் பராமரிப்பு | 8000 | 00 |
| | ஆக | 430950 | 00 |

# பூஜைகள்

*நித்தியபூஜை:—* நாடோறும் தியாகராஜஸ்வாமிக்கும், வன்மீகநாதருக்கும் ஆறுகால பூஜைகள் நடக்கின்றன.

*(1) திருவனந்தல்:—* காலை 6-மணிக்கு நடைபெறும். ஸ்ரீ நீலோற்பலாம்பாள் சந்நிதியிலிருந்து ஸ்ரீ சொக்கப் பெருமானை ஸ்ரீ தியாகராஜசுவாமியின் சந்நிதிக்கு எழுந் தருளச்செய்து பால் நைவேத்யம் நடைபெறும்; நிவே தித்தபால் அன்பர்களுக்கு விநியோகம் செய்யப்பெறும். அப்போது வன்மீகநாதர் சந்நிதியில் தீபாராதனை நடக்கும்.

*(2) காலசந்தி:—* காலை 10-மணிக்கு நடைபெறும். சுற்றுக்கோவில் பஞ்சலிங்கம் முதலிய சுவாமிகளுக்கு அபி ஷேகம் நடக்கும். வன்மீகநாதருக்கு அபிஷேகம் நடை பெறும் ஸ்ரீ தியாகராஜருக்கு நைவேத்யம் செய்து தீபாரா தனை நடைபெறும்.

*(3) உச்சிக்காலம்:—* பகல் 12-மணிக்கு நடக்கும். ஸ்ரீ தியாகராஜர் ஸந்நிதியில் உள்ள மரகத விடங்கருக்குத் தியாகராஜர் முன் மண்டபத்திலேயே அபிஷேகம் நடக்கும். பின்னர் வன்மீகநாதருக்கு அபிஷேகமாகும்; நைவேத்யம் தீபாராதனை நடைபெறும். பின்னர் தியாகராஜருக்கு நைவேத்யம் தீபாராதனை நடைபெறும்.

(4) சாயரக்ஷை:— இது மாலை 6-மணிக்கு நடக்கும். இது திருவந்திக்காப்பு என்று இங்கு வழங்கப்பெறும். இது இத்தலத்தில் விசேஷம் வாய்த்தது. எல்லாச் சிவத் தலங்களிலுமுள்ள சிவகலைகளும் திருவந்திக்காப்பு நேரத் தில் இத்தலத்து ஒருமிக்கக் கூடியிருப்பதாக ஐதீகம். சாயரக்ஷையில் தியாகராஜாவுக்குந் திருப்பணி சாத்தித் திருச்சாந்து இட்டு, சுத்த மத்தள வாத்தியங்களுடனும், பாரி நாதசுரத்துடனும் வழிபாடு மிக விமரிசையாக நடைபெறும்.


(5) இரண்டாம் காலம்:— வன்மீகநாதருக்கு அபி ஷேகம் உண்டு. சுற்றுக்கோவில்களுக்கும் அபிஷேகம் நைவேத்யம் நடைபெறும். நீலோத்பலாம்பாளுக்கும் அபி ஷேகம் நடைபெறும். தியாகராஜாவுக்கு முன் மரகத விடங்கருக்கு அபிஷேகம் நடைபெறும். பிறகுதான் தியாக ராஜருக்கு அலங்கார தீபாராதனைகள் நடைபெறும். பின்னர் ஸ்ரீ பலிநாயகரை எழுந்தருளச் செய்வது தேவா சிரியம் நடுப்பந்தியில் கொண்டுவந்து பலிபோடப்பெறும்.

(6) அர்த்தயாமம்:—வன்மீகநாதருக்கு நைவேதன மாகும். ஆராதனைகள் செய்து தியாகராஜஸ்வாமி சந்நிதி யிலுள்ள ஸ்ரீசொக்கப் பெருமானையும் பல்லக்கில் எழுந்தருளச் செய்து தீவர்த்தி சாமரம் முதலிய உபசாரங்களுடன் பிரதக்ஷிணமாக வந்து நீலோத்பலாம்பாள் சந்நிதியில் உள்ள பள்ளியறையில் வைத்து ஊஞ்சலாட்டு நடத்துவது வழக்கம். பிறகு பைரவருக்கு அபிஷேகம், நிவேதனம் நடைபெறும்.

கமலாம்பாள் சந்நிதியில் திருவனந்தல் தவிர மற்ற ஐந்து காலங்களும் நடைபெறும்.

மாதவிழா:— ஒவ்வொருமாத பௌர்ணமியிலும் கம லாம்பாள், நீலோத்பலாம்பாள், வன்மீகநாதர், பஞ்சலிங்

CONNEMARA PUBLIC LIBRARY
26 APR 1970
MADRAS



தெப்பம்

கங்கள் ஆகிய மூர்த்திகளுக்கு அபிஷேகமும், விசேஷ நைவேத்யங்களும் நடைபெறும்.

வருஷ ஏறுபடிகள்:— தியாகப் பெருமானுக்கு, ஆடி, ஐப்பசி, விஷு புண்ணிய காலங்களிலும், மார்கழித் திருவாதிரையிலும், பங்குனி உத்திரத்திலும், தைச் சங்கராந்தியிலும் தேருக்கு எழுந்தருளி மீண்டுவந்ததும் (பிராயச்சித்தாபிஷேகம்) சித்திரை விஷுவிலும் கிரஹண புண்ணிய காலங்களிலும் மஹாபிஷேகங்கள் நடைபெறும். அவை மிக விரிந்த முறையில் நடைபெறும்.

மற்றும் சித்திரையில் வஸந்தோற்சவம் (கோடைக்கால உற்சவம்) பத்து நாட்களும், வைகாசியில் விசாகத் திரு நாளில் பால் மாங்காய் ஏறுபடியும், சீராளன் கறி ஏறுபடியும், நடைபெறும்; இன்னும் ஆவணி மாத சூர்ய பூஜை, ஆவணி மூலம், கேதாரி பூஜை, புரட்டாசி பௌர்ணமியில் நிறைபணி, நவராத்திரி அஷ்ட துர்க்கா உற்சவம், கந்த ஷஷ்டி, ஐப்பசிப் பரணி, ஐப்பசிப் பூரம், கார்த்திகைச் சோமவாரங்கள், திருக்கார்த்திகை மார்கழித் திருப்பள்ளி எழுச்சி மாணிக்கவாசகர் திருவெம்பாவை உற்சவம், ஊஞ்சல் உற்சவம், ஆருத்திரா தரிசனம், கனு மண்டப உற்சவம், தைப் பூசம், மகா சிவராத்திரி முதலிய உற்சவங் கள் மிக விரிவான முறையில் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் நிறைபணியுற்சவம் மிக விசேடமானது. அன்று இந்திரன் இங்கு வந்து தியாகப்பெருமானைப் பூசிப்பதாக ஐதீகம்.

பெருவிழா :— பங்குனி உற்சவம்; இதுவே ப்ரம்மோற் சவம். மாசிமாத அஸ்த நட்சத்திரத்தில் கொடியேறிப் பங்குனிமாத உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தம் நடைபெறும். *சந்திரசேகரப்பட்டம் என்ற விழாமுதல் தீர்த்தம் வரை

* இவ்விழாவில் அடியார் வழிபாடு செய்வதற்காகப் புகலூர் இறைவனைப் பாடிச் சுந்தரர் பெருமான் பொன் பெற்றாரென்றும்; திருவொற்றியூர் சென்றிருந்த சுந்தரர்பெருமான் இவ்விழாவின் சிறப்பை முன்னிட்டுத் திருவாரூருக்கு எழுந்தருளினார்கள் என்றும் பெரிய புராணமும், சுந்தரர் தேவாரமும் அறிவிக்கும்.

உற்சவம் சிறப்பாக இருக்கும். வசந்தன், திருத்தேர், பக்த காட்சி என்ற மூன்று விழாக்களிலும் தியாகராஜர் அசைந்தாடி வருவர்.

மார்கழித் திருவாதிரை விழா அப்பரடிகளுடைய வாயால் பதிகம் பெற்றது. திருஞானசம்பந்தப் பெருமான் திருப்புகலூரில் எழுந்தருளியிருந்தபோது திருவாரூர்த் திருவாதிரைத் திருநாளைத் தரிசித்துவந்த அப்பரடிகளை 'எங்கிருந்து வருகின்றீர்கள்' என வினவ, அப்பரடிகள், ''முத்து விதானம்'' என்று தொடங்கும் பதிகத்தால் திருவாதிரைத் திருநாளின் மகிமையை விளக்கினார்கள். அவர்களது பதிகத்தின் அருமையே ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானை உடனே திருவாரூருக்கு வரச் செய்தது. தியாகப்பெருமானுக்குத் திருவாதிரையன்று மகாபிஷேகம் நடைபெறும்.

*ஆடிப்பூரம் :—* கமலாம்பாளுக்கு நடைபெறும் பெரிய தேருற்சவம். இது பதினைந்து நாட்கள் நடைபெறும். தேரோட்டமுமுண்டு. ஆடிப்பூரத்தன்று அம்மை தீர்த்தம் வழங்கி, அன்றிரவு வெள்ளை சாத்தி, வெண்சாந்து அணிந்து, வெள்ளைப் பூச்சூடி எழுந்தருளிப் பார்வதீஸ்வரர் கோயிலில் இறைவனுடன் ஒன்றுபடுவதாக ஐதீகம் நடைபெற்று வருகின்றது.

இவ்விழாக் காலங்களில் உத்தரபாத தரிசனத்திற்கும், மார்கழித் திருவாதிரைத் தரிசனத்துக்கும் திருவிளமரிலிருந்து பதஞ்சலி, வியாக்ரபாதர் எழுந்தருளிவந்து தரிசனம் பெற்றுச் செல்வர்.

*அர்ச்சனைகள் :—* தியாகப்பெருமானுக்கு சோமவார சுக்கிர வாரங்களில் விசேஷமாக நடக்கும். இது பெரிய யாத்திரை ஸ்தலமாக இருப்பதால் எல்லாக் காலங்களிலுமே இடைவிடாது அர்ச்சனை நடைபெற்றுக் கொண்டிருக்கும்; முசுகுந்தார்ச்சனை; முகுந்தார்ச்சனை என்ற இரண்டு பெரிய அர்ச்சனைகள் நடைபெறும். இவை இந்தத் தலத்திற்கே சிறப்பான அர்ச்சனைகள். இந்த அர்ச்சனைக்குரிய

நைவேத்தியம், புஷ்பம் முதலியவற்றிற்கான செலவு குறைந்தது ஐந்நூறு ரூபாய்களாகும். தற்போது அஷ்டோத்திர அர்ச்சனைகளுக்கு தியாகப்பெருமான் ஸந்நிதிக்கு 0—25 காசு, ஏனைய சந்நிதிகளுக்கு 15 காசு, சகஸ்ரநாம அர்ச்சனைக்கு 0—75 காசு விதிக்கப்பட்டிருக்கிறது. கட்டணச் சீட்டுப்பெற்றே அன்பர்கள் அர்ச்சனை செய்வித்தல் வேண்டும்.

## நிர்வாகம்

இத்திருக்கோயில் பூஜைகளையும், தருமங்களையும் நடத்த பதின்மூன்று கட்டளைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டளைக்கும் தனித்தனி தர்மகர்த்தாக்களும், பிரத்தியேகமான சொத்துக்களும் உண்டு. அக்கட்டளைகளில் உள்துறைக் கட்டளை, அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை, இராஜாங்கக்கட்டளை என்பவை முக்கியமானவை. ஒவ்வொரு கட்டளையும் அதனதன் வருமானங்களிலிருந்து பணமாகவும், பொருள்களாகவும் நித்திய நைவேத்திய பூஜைகளுக்குத் திட்டப்படி கொடுத்துக்கொண்டு வருகின்றது.

உள்துறைக் கட்டளை :— உள்துறை நிர்வாகப் பொறுப்பையும் வைத்துக்கொண்டிருக்கிறது. உள்துறைக் கட்டளைக்கு எண்ணாயிரம் ரூபாய் வரையில் மோகினி வருகிறது. இஃதல்லாமல் அதற்குச் சில கட்டிடங்களும், மனைகளும், நஞ்சை புஞ்சை நிலங்களும் இருக்கின்றன. மிகப் பெரியது அபிஷேகக்கட்டளை. அதற்கு அடுத்தது இராஜன்கட்டளை. கோயிற் செலவில் பெரும்பகுதியும் இவ்விரண்டு கட்டளைகளுமே ஏற்றுக்கொள்ளுகின்றன. அன்னதானக்கட்டளை யாத்திரிகர்களுக்கு இடவசதியும், உணவும், தண்ணீர்ப் பந்தலும் ஆகிய இத்தருமங்களைச்

செய்து வருகிறது. திருக்கோயில் சார்பிலேயே இவ்வளவு தருமங்கள் நடைபெறுவது இங்கு விசேஷம். இக்கட்டளை கோயிலுக்கு ஏற்பட்ட திட்டத்துடன் தீப கைங்கர்யத்தையும் செய்துவருகிறது.

இந்தக் கோயில் 1810-ஆம் வருஷம் முதல் பஞ்சாயத்து சபையாரால் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தது. 1820-ஆம் வருஷத்தில் வேளாக்குறிச்சி, தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் முறையே அபிஷேகக் கட்டளை, இராஜன் கட்டளைகளின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சர்க்காருக்குப் பத்திரமும் எழுதிக்கொடுத்தார்கள். கொஞ்ச காலம் கழித்து அன்னதானக் கட்டளையின் பொறுப்பும் வேளாக்குறிச்சி ஆதீனத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1847-ஆம் வருஷம் பல கட்டளைக் காரர்களிடமிருந்து அந்தந்தக் கட்டளையை சரிவரச் செய்துவருவதற்காகச் சர்க்காரில் உறுதிமொழி எழுதி வாங்கிக்கொண்டனர். பின்னர் கோர்ட் ஸ்கீம் ஏற்பட்டு 1937-ஆம் வருஷம் வரை பரிபாலிக்கப் பெற்றுவந்தது. ஸ்கீமின்படி நிர்வாகம் நடந்து வராமையால் அரசாங்கத்தார் கட்டளைகளையும் கோயிலையும் இந்துமத பரிபாலன போர்டாரின் ஆட்சிக்கு உட்படுத்தினார்கள். 22-7-37 முதல் போர்டாரால் எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர் (நிர்வாக உத்தியோகஸ்தர்) ஏற்படுத்தப்பட்டார். அது முதல் அவரே நிர்வாகத்தை நடத்தி வருகிறார்.

இராஜன் கட்டளைச் சொத்துக்களைத் தவிர மற்ற எல்லாக் கட்டளைச் சொத்துக்களும் நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையிலே இருந்து வருகின்றன. இராஜன் கட்டளைச் சொத்துக்களைத் தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் மேற்பார்த்து அதன் வருமானம் முழுமையும் அப்போதைக்கப்போது நிர்வாக அதிகாரியிடம் செலுத்திச் சொத்து மேற்பார்வைக்கு வேண்டிய பணத்தை மேற்படி அதிகாரியிடம் பெற்றுக்கொள்கிறார்கள்.

எல்லாக் கட்டளை வருமானங்களிலுமிருந்தும் வரும்படிக்குத் தக்கவாறு கோயில் செலவும், ஆபீஸ் செலவும், திட்டப்படி செலவும் செய்யப்படுகின்றன.

உள்துறைக் கட்டளை மானேஜிங் டிரஸ்டி உள்துறை நிர்வாகத்தை மேற்பார்த்து சிப்பந்திகளின் மாதச் சம்பளத்துக்கு எக்ஸிக்யூட்டிவ் ஆபீசருக்கு பில் அனுப்பி பட்டுவாடா செய்கிறார். உள்துறை சம்பந்தமாக நிர்வாக அதிகாரி பொதுவான மேற்பார்வை பார்த்து வருகிறார். கட்டிடங்கள் வாகனங்கள், நகைகள் இவைகளை ரிப்பேர் முதலியன செய்து நல்ல நிலையில் வைக்க வேண்டியது நிர்வாக அதிகாரியின் பொறுப்பு.

பாலாயி, அர்த்தஜாமக் கட்டளைகளுக்கும் தனியான சொத்துக்கள் உண்டு. விஷு புண்யகால கர்ப்பூர, பரிவட்ட கட்டளைகளும் ஒரு தர்மகர்த்தாவிடம் இருந்து வந்தன. திருச்சாந்துக் கட்டளைக்காக ரூ. 36-7-3ம் மோகினி ரூ. 29—2—0ம், ஆக ரூ. 65—9—3 வருமானம். இதனைப் பெற்றுக்கொண்டு திருச்சாந்து திருப்பணியை அந்தக் கட்டளை டிரஸ்டியே செய்துவருகிறார். வீதி விடங்கன் சேதுபதி கட்டளைகள் ராஜன் கட்டளைக்குட்பட்டன.

# இலக்கியங்கள்

| நூற்பெயர் | ஆக்கியோர் பெயர் |
| --- | --- |
| 1. திருவாரூர்ப் புராணம் | சம்பந்த முனிவர் (தருமையாதீன அடியார் குழாம்) |
| 2. கமலாலயச் சிறப்பு | சிதம்பரம் மறைஞான சம்பந்தர் |
| 3. தியாகராஜ லீலை | மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை |
| 4. தேவாசிரிய மான்மியம் | —— |
| 5. திருவாரூர் மும்மணிக் கோவை | சேரமான் பெருமாள் 11ம் திருமுறை |
| 6. திருவாரூர் நான்மணி மாலை | குமரகுருபர சுவாமிகள் |
| 7. ௸ பன்மணிமாலை | இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர் |
| 8. ௸ குறவஞ்சி | கமலைஞானப்பிரகாச சுவாமிகள் |
| 9. திருவாரூருலா | அந்தகக்கவி வீரராகவ முதலியார் |
| 10. சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி பதிகம் | தருமை ஆதினம் 10-வது மஹாசந்நிதான ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிகரவர்கள் |
| 11. ௸ மாலை | —— |
| 12. தியாகப்பள்ளு | கமலைஞானப்பிரகாச சுவாமிகள் |
| 13. திருவாரூர்க் கோவை | சைவ. எல்லப்ப நாவலர் |
| 14. ஆரூர்த்தல மாலை | —— |
| 15. அஜபா நடேசர் பதிகம் | தருமையாதீன வெளியீடு |
| 16. திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பா அந்தாதி | தியாகராஜச் செட்டியார் |
| 17. ௸ மருந்து வெண்பா மாலை | ௸ |
| 18. கமலை பராசத்தி மாலை | —— |
| 19. தேசுர்ந்த சோழபுராணம் | —— |

| | |
|---|---|
| 20. திருவாரூர் ஒருதுறைக் கோவை | கீழ்வேளூர் குருசாமி தேசிகர் |
| 21. கமலாம்பிகை பிள்ளைத் தமிழ் | — |
| 22. தியாகராஜர் கழி நெடில் | — |
| 23. ஷை கலிப்பா | — |
| 24. பெரிய புராணத்துத் திருவாரூர்ச் சிறப்பு | சேக்கிழார் |
| 25. கந்தபுராணத்துக் கந்த விரதப்படலம் 120 பாடல் | கச்சியப்பர் |
| 26. திருவாரூர் இரட்டை மணிமாலை | — |
| 27. திருவாரூர் விநாயகர் இரட்டை மணிமாலை | திருவாரூர்ச் சதாசிவ தேசிகர் |
| 28. திருவாரூர்ப் பதம் | பாபவிநாச முதலியார் |

## வடமொழி நூல்கள்

1. அஜபா ரகசியம்
2. ஆடகேஸ்வர மகாத்மியம்
3. கமலாலய மகாத்மியம்
4. நாகரகாண்டம்
5. தியாகராஜ லீலை
6. சமற்காரபுர மான்மியம்
7. தியாகராஜபுர மான்மியம்
8. தேவயாகபுர மான்மியம்
9. தேவாசிரிய மகாத்மியம்
10. முசுகுந்தபுர மான்மியம்
11. ராமகயா மான்மியம்
12. ஸ்ரீபுர மான்மியம்
13. ஸ்கந்தபுர மான்மியம்
14. க்ஷேத்ரவரபுர மான்மியம்
15. முத்துசாமிதீக்ஷிதர் கீர்த்தனம்
16. தியாகராஜாஷ்டகம்

# பாடல்கள்

இத்தலம் ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த 55 திருப்பாடல்களையும், அப்பரடிகள் அருளிய 208 திருப்பாடல்களையும், சுந்தரர் தந்த 87 பாடல்களையும், உடையது. திருவாசகத்தில் திருப்புலம்பல் மூன்று பாடல்களையும், பூந்துருத்தி நம்பி காடவ நம்பிகள் அருளிய திருவிசைப்பாவையும். திருப்புகழில் 3 பாடல் களையும் உடையது. இவை அருட்பாடல்கள்.

இவையேயன்றித் தனிப்பாடல்களும் பல உள்ளன. தனிச்செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடற்றிரட்டு முதலிய வற்றிலும் சோழமண்டல சதகம் முதலியவற்றிலும் இப்பாடல்களைக் காணலாம்.

பெரியபுராணத்தாலறியப்பெறும் இங்கு வசித்த அடியார்கள்; விறண்மிண்டர், செருத்துணையார், நமி நந்தியடிகள், தண்டியடிகள், கழற்சிங்கர், சேரமான் பெருமாள், சுந்தரர் முதலியவர்கள்.

**இத்தலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்கள் :--**

முதற்புலவர்: நாவலர் காவலராகிய சுந்தரர் பெருமான்.

கமலைஞானப்பிரகாசர் இலக்கணவிளக்கம் வைத்ய நாத நாவலர், சதாசிவ நாவலர். படிக்கராசர், ஒப்பிலா மணிதேசிகர், நிர்மலமணி தேசிகர், சாந்தலு சாரியர், புராணம் பாடிய சாமிநாத தேசிகர், குடவாயிற் புராண மும், பராசக்தி மாலையும் பாடிய சிதம்பர தேசிகர் முத லானவர்கள் இங்கு வாழ்ந்த புலவர்கள்.

# திருப்பணி

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நாட்டுக்கோட்டை நகர வணிக மரபைச் சேர்ந்த திருவாளர் அரு. அரு. சோம சுந்தரஞ் செட்டியார் அவர்களும், சக்கந்தி O. L. K. N. லக்ஷ்மணன் செட்டியார் அவர்களும், பெரும் பொருள் சேகரித்துத் திருப்பணியைத் தொடங்கினார்கள். கீழராஜ கோபுரம், வெளித்திருமதில்கள் முதலியவற்றைத் திருப்பணி செய்து முற்றுவித்தனர். திருக்கோயில் முழுதுமே திருப்பணி செய்ய எண்ணியும் முற்றுப் பெறுமற் போயிற்று. அதற்கென்று வந்த கருங்கற்கள் பல முதற் பிரகாரத்துக் கிடக்கின்றன. பின்னர் இப்போது திருப்பணி பெரும்பாலும் இனிது நிறைவேறியிருக்கிறது.

சபாபதி மண்டபம் என்பது ஜீர்ண நிலையிலிருந்தது. அதனைத் தேவஸ்தான பொருள் கொண்டே நிர்வாக அதிகாரி அவர்கள் பெருமுயற்சியால் முற்றுவித்தார்கள். மற்றும் அவர்களாலேயே ஆகாச விநாயகர், பார்ப்பதியீச்சரம், துலாபார மண்டபம் முதலிய திருக்கோயில்களும் திருப்பணி முற்றுவிக்கப் பெற்று 28—8—1942 கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

பின்னர், இவ்வூர் அன்பர் பலருடைய திருவுள்ளத்தும் செல்வத் தியாகேசன் திருவருள் இருந்து இயங்கத் தொடங்கியது. அதனால் வடபாதிமங்கலம் எஸ்டேட் திருவாட்டி ஜானகியம்மாள் அண்ணியவர்கள் பெரும் பொருள் அளித்துக் கமலாலய தீர்த்தத்தைச் செப்பனிடச் செய்தார்கள். அதனால் அத்தீர்த்தம் நான்கு கரைகளும் எடுத்துக்கட்டப் பெற்று, அங்கங்குள்ள தீர்த்தக் கட்டங்களும், சிறு கோயில்களும் சீரிய முறையில் அழகாகக்கட்டப்பெற்றுள்ளன. அது அறிவின்பத்தையாக்குவதே யன்றிக் காட்சியின்பத்தையும் விளைவிக்கின்றது.

அதன் பின்னர் தேவாசிரிய மண்டபத்தின் பெருமையை யறிந்த திருவாளர் T. N. சபாபதி முதலியார் அவர்கள் அம் மண்டபத் திருப்பணிக்குப் பெரும் பொருளுதவ முன்வந் தார்கள். அதனால் அம்மண்டபம் மிக்க அழகோடு பழம் பெருமையை இன்று புதுக்குவதாகத் திகழ்கின்றது. வன்மீக நாதரைச் சுற்றியுள்ள சித்திரங்கள் தேவஸ்தானப் பொறுப் பிலும் க்ஷீராப்தி சயனமும், அந்தப் பக்கத்திலுள்ள மற்றச் சித்திரங்களும், திரு. V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் பொருளுதவியாலும் எழுதப்பெற்று முடிவடைந்தன. மற்றும் 2-ம் பிராகாரத்து வடப்பக்கத்துள்ள சிறு கோயில்கள் பலவும் தேவஸ்தானப் பொறுப்பில் திருப்பணி செய்யப் பெற்றன.

மற்றும் ஆரியன் கோபுரம், வாகன அறைகள் அறை வாசல்கள், தெற்குக் கோபுரம், வடக்குக் கோபுரம், விட்ட வாயிற் கோபுரம், முதலியவை திருப்பணியாக வேண்டிய நிலையில் உள்ளன. திருவருள் இவைகள் நிறைவேறச் சிவபுண்யச் சீலர்கள் பலரையும் தூண்டித் துணை நின்று முற்றுவிக்கும் என்ற உறுதி உண்டு.

4—2—45ல் இவ்வாலயத்திற்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிருந்த நிர்வாக அதிகாரி திரு. M. A. பாண்டியம் பிள்ளை அவர்களின் பெரு முயற்சியாலும், உள்துறை டிரஸ்டி திரு. V. S. தியாகராஜ முதலியார் அவர்களின் பேருதவியாலும் சுமார் ஒரு லட்ச ரூபாய் திரட்டப்பெற்று பல பகுதிகள் பழுது பார்க்கப்பெற்று கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறிற்று.

## "ஆரூரான் திருமண மண்டபம்"

கோயிலின் கிழக்குக் கோபுரத்திற்கு இடது கைப்புற மாகப் பொதுமக்களின் நன்மை கருதி "ஆரூரான் திருமணமண்டபம்" ஒன்று அண்மையில் சிறந்த முறையில் கட்டப்பெற்றிருக்கிறது. இம்மண்டபம் 19—6—69 அன்று,

தமிழக அரசின் மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்களால் திறக்கப்பெற்றது. இதைக் கட்டச் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவழிந்துள்ளது. இதில் நவீன வசதிகள் எல்லாம் அமைந்துள்ளன. தனிச் சமையல் அறையும், ஒரே சமயத்தில் சுமார் 250 பேர் உணவருந்தக்கூடிய சாப்பாட்டிடமும் உள்ளன. குளிக்கும் அறை – பிளஷ்அவுட் கக்கூஸ், தண்ணீர்க் குழாய், மின் விசிறிகள், மணமக்கள் தங்குவதற்கான தனி அறை, மண மேடை, சுமார் ஆயிரம் பேர் அமர்வதற்கான பெரிய ஹால் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தை அடுத்து கார்கள் தங்குவதற்கு அகன்ற இடங்கள் உள்ளன. இதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 125/– வாடகை வசூலிக்கப்படுகிறது. மின் கட்டணம் தனியாக வசூலிக்கப்படும். மண்டபத்தின் முகப்பில் சுந்தரர் பரவையார் திருமணச் சிற்பம் கண்டு களிக்கும் சிறப்புடையது.

# முடிவுரை

நிறைசெல்வத் தியாகப்பெருமான் 'பூங்கோயிலுட் புகுந்து போகாதிருந்தாரே' என்ற அருள் வாக்கிற்கு இலக்கியமாக எழுந்தருளியிருக்கின்ற பெருங்கருணையை அன்பர்கள் பெற்றுய்ய வேண்டும். வன்மீகநாதரும் சோமகுலாம்பிகையும், அருட்கோலம் கொண்ட நிலையும் கமலாம்பராசத்தி தவத்திருக்கோலங்கொண்டுள்ள நிலையும் அறிதொறும், அறிதொறும் இன்பக்கடலுள் ஆழ்த்தும் தன்மையன. ஆதலின், பூமிதேவிக்கு இருதயகமலமாயும், கலிசெலா நகரமாயும், தேவர்களும் வந்து வணங்கிய பெருமை படைத்ததாயும் உள்ள இத்தலத்தை ஆன்ம கோடிகள் வணங்கி இருமையின்பங்களையும் எய்த எல்லாம் வல்ல ஸ்ரீ தியாகப்பெருமான் அருள் செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

# திருவாரூர்க் கல்வெட்டுக்கள்

இக்கோயிற் கல்வெட்டுகள் 65க்கு மேல் இருக்கின்றன. இவற்றில் முதல் இராசராசன் (569 of 1904 570, 571 of 1904). முதல் இராசேந்திரன் (568, 569 of 1904) இராசாதித்தன் (670 of 1919) முதற்குலோத்துங்கன் (541 of 1904), விக்ரமசோழன் (164 of 1904), இரண்டாம் குலோத்துங்கன் (553 of 1904). மூன்றும் இராசேந்திரன் (555 of 1914) இரண்டாம் இராசராசன் (538 of 1904) என்ற இவர்தம் கல்வெட்டுகள் கி. பி. 9-ம் நூற்றுண்டினனுன ஸ்ரீமான் ஸ்ரீ வல்லபன் என்ற பாண்டி மன்னன் கல்வெட்டும் (539 of 1904). கி. பி. 1268—1308 இருந்த மாளவர்மன் குலசேகரன் 1 கல்வெட்டும் (55 of 1904) அச்சுதப்ப நாயகன் (கி. பி. 1572—1614) கல்வெட்டும் சரபோஜி மன்னன் (கி. பி. 1711—1727) கல்வெட்டும் பிறவும் காணக் கிடைக்கின்றன.

இராசராசன் பாட்டியும் கண்டராதித்தர் மனைவியுமான செம்பியன்மாதேவியார் ஆரூர் அறநெறிக்கோவிலைக் கற்கோயில் ஆக்கினுர்; அக்கோயிலின் தினசரிப் பூசைக்காக 234 பொற்காசுகள் அளித்தார்; வெள்ளிப்பாத்திரங்களைக் கொடுத்தார். 1 முதற் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1070—1110) பூங்கோவில்நம்பி என்பவன் 'வீர அணுக்கன்' என்னும் அரசனது நம்பிக்கைக்குரிய தலைவன் மீது நூல் ஒன்றைப் பாடினுன். அது 'வீர அணுக்க விஜயம்' எனப்பட்டது. 2. முதல் இராசாதிராஜன் ஆணைப்படி வீதிவிடங்கப் பெருமானுக்குப் பொற்பல்லக்குச் செய்ய

---

73, 74 of 1890; 164 of 1894, 269 of 1901, 533 to 579 of 1904; 553 of 1918, 669 to 681 of 1919.

1. 570, 571 of 1904. 2. 548 of 1904. 3. 670 of 1919. 4. 669 of 1919. 5. 674 of 1009.

கோயில் பண்டாரத்திலிருந்து பொன் பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. 3. திரு மண்டபம் பொன்னால் சமைக்கப் பலவகைப் பொன்வகைகள் குறிக்கப்பட்டுள்ளன. 4. கோவிலில் அரசனது பிறந்த நாட்கள் (ஐப்பசியில் சதயமும், ஆடியில் ஆருத்ராவும்) கொண்டாடப்பட்டு வந்தன. 5. தேவாரம் பாடுவார்க்கு நில தானம் செய்யப்பட்டது. 6. இராசராசமடை என்பது இக்காலப் பவுன் நிறைபோன்ற அரசாங்க (Standard) நிறை ஆகும். அதற்கு 3 கழஞ்சு 1 மஞ்சாடி, 1 குன்றிமணி எடையுள்ள பொன் சரியானது. 7. கோயில் காரியங்களைக் கவனிக்கக் குழு (Temple Assembly) இருந்தது. அது கோயில் காரியங்களைக் கவனிக்கத் தேவாசிரியன் என்ற மண்டபத்திற் கூடிவந்தது. 8. கன்றைக் கொன்ற மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற மநுச்சோழனுக்கு அமைச்சனாக இருந்த ஒருவனது வழியில் வந்த குலோத்துங்க சோழ மாவலி வாணராயன் என்பவன் செய்த அறச்செயல் குறிப்பதொரு கல்வெட்டு. 9. இரண்டாம் குலோத்துங்கன் அநபாயன் என்று பல கல்வெட்டுகளிற் கூறப்பட்டுள்ளான். அவன் காலத்தில் திருவாரூர்க் கோயிலில் ஓராண்டில் 56 திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. 10. திருவாரூர் கி. பி. 13-ம் நூற்றாண்டில் ஜயமாணிக்கவள நாட்டைச் சேர்ந்திருந்தது. 11. மூன்றும் குலோத்துங்கனை வீதிவிடங்கப்பெருமான் 'நம்தோழன் திரிபுவன வீரதேவன்' என்று சொன்னதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. 12. ஒரு கல்வெட்டில் அக்காலச் சமூகநிலை விளக்கப்பட்டுள்ளது. நாரதர், மஸ்கரர், யாக்ஞவல்கியர் முதலான அறநூல் ஆசிரியர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்; கலப்புச் சாதியாரான அநுலோமருடைய தோற்றம், கடமைகள், உரிமைகள்

---

6. 678 of 1919; 7. 671 of 1919; 8. 553 of 1904; 561 of 1904. 9. 164 of 1894; 10. 269 of 1901; 11. 553 of 1904; 12. 554 of 1904; 13. 558 of 1904; 14. 566 of 1904, 567 of 1907; 15. 676 of 1919.

முதலியன விளக்கப்பட்டுள்ளன. 13. லக்கன தன்னையக உடையார் என்ற அமைச்சனது கௌரவத்திற்காகச் சித்தரசன் மகனுன நாகராசன் என்பவன் மேற்குக் கோபுரத்தைக் கட்டினன் என்று கன்னடக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. 14. கங்கை கொண்ட சோழபுரத்து உடையார் வீதிவிடங்கதேவர் மனைவி, அம்மனுக்கு விலை உயர்ந்த நவமணிகள் அளித்தாள் என்று கல்வெட்டு ஒன்று கூறுகிறது. 15. மற்றக் கல்வெட்டுகள் பலர் கோவிலுக்கு வைத்த நிலம், விளக்கு முதலிய பலவகைத் தானங்களைக் குறிக்கின்றன. 'சுந்தரர் தாயான இசை ஞானியார் திருவாரூரில் இருந்த ஞானசிவா சாரியார் மகளார்' என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

---

# மநுச்சரிதங்கண்ட கல்வெட்டு

A. R. No. 164—1894

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோவில்
2-ம் பிராகாரம் வடபுறச் சுவரில்

சுவஸ்தி ஸ்ரீ பூமாலை இடைந்து பொன்மாலை திகழ்ப் பாமாலை மலிந்த பருமணித்திரள்புயத்திரு நிலமடந்தை யோடு ஜயமகளிருப்ப—வேதமும் மெய்மையும் ஆதியுகம் போலத் தலைத்தலை சிறப்ப வந்தருளி வெலற்கரும் போர்புலி ஆனைபார்த்திபர் சூட—மண்முழுதும் களிப்ப மநுநெறி வளர்த்து தன்கோயில் கொற்ற வாயிற்புறத்து மணி நாவொடுங்க—திரிபுவனமுடையாளிவன் திருவுளத்தருள் முழுதுடையானென உடனிருப்பச் செம்பொன் வீரசிம்மா சனத்து சேக்கிழானடிகளோடும் எழுந்தருளிய கோப்பர கேசரிவர்மனுன திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ

தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது மிதுன ஞாயிற்றுப் பூர்வ பட்சத்து சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் அத்தமுமான நாள் 340 ஜெயமாணிக்க வளநாட்டு திருவாரூர்க்கூற்றத்துத் திருவாரூர் உடையார் வீதிவிடங்கர் சித்திரைத் திங்கள் திருநாளில் சதைய......திருக்காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளியிருந்து பதியிலாளர் தியாகவிநோதத் ...... கண்டருளாநிற்ப ஸ்ரீ காரியம் சுப்பிரமங்கலமுடையான் மாதவன் இரவியானமாணலைய மூவேந்தவேளார் விண்ணப் பத்தினால் பதிபாலமூலபட்டுடை பஞ்சாசாரிய தேவகன் மிகளுக்கும் கோயிலங்......யார்க்கும் திருவாய்மொழிந் தருளியபடி நம் ஏவலால் பூலோக ராஜ்யம் செய்கிற சூர்ய புத்திரன் மநு தன் புத்திரன் ஏறிவருகிற தேரில் பசுவின் கன்றகப்பட்டு பிரமாதப்பட அதன் மாதாவானசுரபி கண்டு துக்கித்து மநுவின் வாசலில் மணியை யெறிய அதுகேட்டு மநு தன் மந்திரி இங்கணுட்டுப் பாலையூருடையான் உபய குலாமலனைப் பார்த்து நீ சென்று இதனை அறிந்து .....வாயிற் புறத்து ஒரு பசு மணி எறியா நின்றது என்று சொல்ல அது கேட்டு, மநு புறப்பட்டு பசுவையும் பட்டுக்கிடந்த......படி வினவி தன் புத்திரன் பிரியவிருத்தனைத் தேரிலே ஊர்ந்து குருக்கவென்று உபயகுலாமலனுக்குச் சொல்ல அவன் சந்தாயத்தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்துகொண்டு துக்கித்தனாய் மநு தானே புரப்பட்டுத் தம் புத்திரனைத் தானே தேரிலே ஊர்ந்து குடுக்க அப் போதே நாம் அவனை அநுக்கிரகித்து கன்றுக்கும் மந்திரிக் கும் மநு புத்திரனுக்கும் ஜீவன் குடுக்க அது கண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்துக்கொண்டு பசுவுக்குக் காட்டி குடு..... ாபிஷேகம்பண்ணி இவனுக்குத் தன் புத்திரன் மாளிகை, மங்கலமூவரும் குடுத்து மநுவும் உபய குலாமலனும் தபசினைத் தலைநின்றமையால் பாலையூர் உடையான் உபயகுலாமலன் வம்சத்தனாகிய பாலையூர் உடையார் சந்திரசேகரனு திவிடங்கனான் குலோத்துங்க சோழ மகாபலிவாண......வம்சாதியாக வருகிற மாளிகை மனை பழையபடி மாளிகை ஆக எடுத்துக்குடி வைப்பதாக நாம் சொல்ல இதிலே நித்தமும் நம் அடியார்க்கு சோறு

இடப்பெறவேணுமென்று இவன் நமக்குச் சொன்னமையில் காட்டிப்பெறுவதாகவும் இம்மாளிகை வம்சாதி ஆகஸ்வ மாய்வரு மாளிகையிலே எழுந்து வெட்டிவித்துக் கொடுக்க வென்று பாலையூருடைய உபயகுலாமலன் மநுவின் பக்கல் பெற்றுடைய மாளிகை மனை தனக்கும்...நாம் காணியாகத் தந்தோம். இம்மாளிகை பழைய மனைநிலத்திற்குக் கீழ் பாற்கொல்லை தூது......முடுக்கு மேற்கும் தென்பாற் கெல்லை... .....வடக்கும் மேற்பாற்கெல்லை அருமொழிஸ்வர முடையார் தளிச்சேரி பால்நத்தத்துக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை பாலையூருடையான் மாளிகைத் தெருவுக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான் எல்லை நடவுட்பட்ட மாளிகை மனை குழி நூற்றிருபதும் இப்பாலையூருடையான் சந்திர சேகரனுதிவிடங்கனை குலோத்துங்க சோழமகாபலிவான ராஜனுக்கு வம்ஸாதியாக ஸ்வமானபடி ஸ்ரீ காமேஸ்வரருக்கும் பதிபாத மூலபட்டுடை பஞ்சாசரிய தேவகன்மிகளுக்கும்......ர்க்கும் உடையார் வீதவிடங்க தேவர் திருவாய் மொழி......கல்வெட்டியது இது. பலமாகேஸ்வர......

# குறிப்பு

S. I. P. Vol. V. No. 456

அரசாங்க பதிப்பிற் கண்டபடி வேண்டிய அளவு மட்டும் எடுத்துத் திருத்தி யெழுதப்பெற்றது. இதில் மநு சரிதக் குறிப்பும் மந்திரியின் பேரும், மைந்தன் பேரும் காண்க. மநு அரசரும் மந்திரியும் இச்சரித நிகழ்ச்சியின்பின் தவநிலை நின்றார் என அறிகின்றோம். இதனால் அச்சரித உண்மையை அறிவதுடன் அந்நாள் சாசனங்கள் எழுதும் வழக்கும் முறையும், பிற வரலாறுகளும் அறிகின்றோம். 'மநு, சூர்யபுத்திரன் என்றும், பசு சுரபி என்றும், மந்திரி பேர் இங்கணாட்டு பாலையூருடையான் உபயகுலாமலன் என்றும், மநுவின் மகன் பேர் பிரியவிருத்தன் என்றும், விக்ரம சோழரது மந்திரியின்பேர் பாலையூருடையான் என்றும்,இவர் உபயகுலாமலன் வம்சத்தில் வந்தவர் என்றும், மநு மந்திரி மகனுக்குத் தந்த மாளிகை விக்ரம சோழர் காலத்தில் புதுப்பிக்க ஆணையிடப் பட்டதென்றும், அது 120 குழி அளவுள்ளதென்றும் அறிகின்றோம். இதிற்கண்ட விக்கிரமசோழன் கி பி. 1118 முதல் 1135 வரை அரசாண்டவர். இவர் மகன் இரண்டாவது குலோத்துங்க சோழர் என்கிற அநபாய சோழர். இந்தச் சாசனம் 31—5—1123ல் வெட்டப் பெற்றதாம். இச்சரிதம் விக்ரமசோழர் காலத்தில் பிரசித்தமாய் வழங்கியதன்றியும் நடித்தும் காட்டப்பட்டிருக்க வேண்டுமென்றும், இதில் குறித்த பெயர்கள் சரிதம் நிகழ்ந்த பிற்காலத்து வந்து வழங்கியவைகளாய் இருக்கக்கூடுமென்றும், சேக்கிழார் சுவாமிகள் இச்சரிதத்திற்றமது புராண நகரச் சிறப்புக்கு அவசியமானவற்றை மட்டும் கொண்டு கூறிப்போந்தனர் என்றும் சரித ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். இங்கணாடு என்பது நாகப்பட்டணம் தாலுகாவில் உள்ள ஒரு பிரிவு. பாலையூர் என்பது மந்திரியின் ஊர். அக்காலத்து அரசர்கள் தம் தேவியார்களுடன் சிம்மாசனத்து வீற்றிருப்பது வழக்கம் என்று அறிகின்றோம். மந்திரிக்குத் தந்த மாளிகை அளவு 120 குழி என்றமையால் அது ஏறக்குறைய

அரை ஏக்கர் நிலம் ஆகிறது. அந்நாளிலே பெரிய அள வுள்ள மனை நிலங்களின் இடையில் மாளிகைகள் அமைக்கப் பெற்றன என்று தெரியலாம். இதிற் குறித்த மனை நிலத் துக்குக் கீழ்பாற்கெல்லையில் தூது என்று (இதற்குமேல் தொடர்ந்த எழுத்துக்கள் சிதைந்து உள்ளன) காண்பதால், தியாகேசர் ஆளுடைய நம்பிகள் பொருட்டு தூது நடந்த செய்தியைப்பற்றித் தெருப் பேர் வழங்கி வந்திருக்கும் என ஊகிக்க இடமிருக்கின்றது. பாலையூருடையான் மாளிகைத் தெரு என ஒரு தெருவின்பேர் காண்பதால் ஒரு தெருவில் வாழும் பெரியவர் பேரால் தெருவுக்குப் பேரிடும் வழக்கம் அந்நாளிலும் இருந்தது என்னலாம். கோயில் ஒழுங்கு முறைகளில் மாகேசுவரர்களுக்கு மிக மேலான கௌரவமும் இடமும் அளிக்கப்பெற்றதும் இந்தக் கல்வெட்டினால் அறி கின்றோம். மாகேசுவரர்களாவார் சிவாகம விதிப்படி உரிய சிவதீட்சைகள் பெற்றுச் சிவபூஜையும் சிவ நியமனமும் உடைய சைவர்கள். இவர்களை மாகேஸ்வரர்களாகக் கொண்டு மாகேஸ்வர பூசைசெய்யும் முறையும், விதிகளும் நூல்களுட் காண்க. அந்தநாட் கல்வெட்டுகள் பன் மாகேசுவர, ரட்சை என்று முடிவுபெறும் பெருவழக்கும் காண்க. பதிபாத மூலப் பட்டுடை பஞ்சாசாரிய தேவ கன்மிகள் என்போர் கோவிலில் அகம்படித் தொண்டு செய்து முப்போதும் திருமேனி தீண்டுதற்குரிய ஆதி சைவர்கள் :— Peria Puranam by Sri. C. K. Subramania Mudaliar.

# ஆலய வழிபாட்டில் உரிய சந்நிதிகளில் பாடுதற்கு உரிய தேவாரப் பாடல்களும், பிறவும்.

---

தேவாசிரியக் காவணத்தில் கீழ்க்கோபுரததை அடுத்து வீற்றிருக்கும் வீதிவிடங்கப் பிள்ளையார் முன்

*திருச்சிற்றம்பலம்.*

1. *விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினல்*
*கண்ணிற் பணிமினி கனிந்து.*

*கபிலதேவநாயனார்*

தேவாசிரிய மண்டபத்தை நோக்கி நின்று அகக் கண்ணல் அங்கு வீற்றிருக்கும் திருக்கூட்டத் தினரைக் கண்டு

2. *தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்*
*திருநீல கண்டத்துக் குயவனர்க் கடியேன்*
*இல்லையே என்னத இயற்பகைக்கும் அடியேன்*
*இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்*
*வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்*
*விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்*
*அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.*

3. *மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்*
*வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்*
*தென்னவனய் உலகாண்ட செங்கணர்க்கு அடியேன்*
*திருநீல கண்டத்துப் பாணனர்க்கு அடியேன்*

என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனும் ஆரூரன் அடிமைகேட்டுவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பராவாரே.

அரனெறியில் உள்ள கூத்தப்பிரான் திருமுன்னர்

4. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் [சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் [வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

அரநெறி அப்பன் திருமுன்னர்

5. நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை
நாகேச்சரம் இடமா நண்ணினானைச்
சந்திமலர் இட்டணிந்து வானோரேத்துந்
தத்துவனைச் சக்கரம்மாற் கீந்தான் தன்னை
இந்துநுழை பொழிலாரூர் மூலட்டானம்
இடங்கொண்ட பெருமானை இமையோர் போற்றும்
அந்தணனை அரநெறியில் அப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்தவாறே

இரண்டாம் சுற்றிலுள்ள எண்ணில் இலிங்கங்களையும்
ஆடகேசுவரம், ஆனந்தேசுவரம் சித்தீசுவரம்
முதலியவற்றையும் வழிபடுக.

சித்தீசுவரம் தென்முகக் கடவுளின் திருமுன்னர்

6. பொன்னினைவி ழுங்குமொரு ரசகுளிகை போலவும்
பூதவிருள் தனைவிழுங்குப்
பூர்ணசந்த் ரோதயம் போலவும் சந்திரன்
பொன்னொளி யைவிழுங்கும்

மன்னும்ஆ யிரகோடி சூரியர்கள் போலவும்
வல்லிரும்பினை விழுங்கும்
மண்டுகனல் போலவும் உப்பினை விழுங்கிடும்
வாரிநீ ரைப்போலவும்
என்னைநீ யுள்விழுங் கிக்கொண் டிருப்பதினி
எக்காலம் எக்காலம்என்று
ஏழையேன் அழுதழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமும் இரங்கவிலையே
உன்னருள் இரங்குநாள் எந்தநாள் ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றுகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே.

—ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள்
(தருமை 10-வது மகாசந்நிதானம்)

இராஜநாராயண மண்டபத்தை வலம் வந்து தட்டன் சுத்தி மண்டபத்தில் வல்லப கணபதியின் திருமுன்னர்

7. ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருமூலட்டானரின் திருமுன்னர்

8. சித்தம் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தி ஆகும்மே. (1)

9. பவனமாய்ச் சோடையாய் நாவெழப் பஞ்சுதோய்ச்சு
[அட்ட உண்டு
சிவனதாள் சிந்தியாய் பேதைமார் போலநீ
[வெள்கினையே

கவனமாய்ப் பாய்வதோர் ஏறுகந்தேறிய காளகண்டன்
அவனதாரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டஞ்சல்
[நெஞ்சே (2)

10. அந்த மாயுல காதியு மாயினுன்
வெந்த வெண்பொடி பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூர்எம்
எந்தை தான்எனை ஏன்றுகொளும் கொலோ. (3)

11. மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள் தொழாதே
உய்யலாய் என்றெண்ணி உறிதூக்கி உழிதந்தென்
உள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும்
ஆரு ரரைக்
கையினுல் தொழாதொழிந்து கனியிருப்பக் காய்
கவர்ந்த கள்வனேனே. (4)

12. வண்டுலா மலர்கொண்டு வளர்சடைக்
கிண்டை மாலை புனைந்து மிராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்கு
அண்ட மாளவும் வைப்பர் ஆரூரரே. (5)

13. பொய்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத்தின் பீர்க்கு
இல்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை அடங்கச்செய்யும்
எம்மான்தன் அடித்தொடர்வான் உழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே. (6)

14. இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தே இசைந்த
[வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை பற்றியான் நோக்கி
[னேற்குத்

திறைகொணர்ந்து ஈண்டித் தேவர் செம்பொனும்
[மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே அஞ்சி
[னேனே. (7)

15. பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறுவெண் ணீறுடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லாது எவையாதும் புகழேனே.
(8)

16. பத்தியாய் உணர்வோர் அருளை வாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்கும் தேவர்கா ளிவர்தந்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோற்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குவா வினரே.

17. குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும்
[குழாம்பெரு
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகுதிரு
[வாரூரின்
மழவிடை யார்க்குவழி வழியாளாய் மணஞ்செய்
[குடிப்பிறந்
பழவடியா ரொடுங்கூடி யெம்மானுக்கே பல்லாண்டு
[கூறுதுமே. (9)

18. புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்இறை ஈசனை
நண்ணகி லாது நழுவுகின்றார்களே ! (10)

19. பொய்யா நரகம் புகினும் துறக்கினும் போந்துபுக்கிங்கு
உய்யா உடம்பினோடு ஊர்வ நடப்ப பறப்ப என்று

நையா வினியினும் நானிலம் ஆளினும் நான் மறைசேர்
மையார் மிடற்றான் அடி மறவா வரம் வேண்டுவனே.
(11)

20 தண்ணனி வெண்குடை வேந்தன் செயல் கண்டு
[தறியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார் வானவர் பூமழை
[சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை
[மேல்
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதிவிடங்கப்
[பெருமான். (12)

—(பன்னிரு திருமுறைகள்)

ஸ்ரீ தியாகராஜப்பெருமான் திருமுன்னர்
மேலே சொன்ன பன்னிரு திருமுறைகளுடன்

21. வதனமும் கருணைசடை மகுடமுங் கருணைசெய்
வடிவமுங் கருணை கழுநீர்
மாலையுங் கருணைசெய் வந்தியுங் கருணையிள
மானு மழுவுங் கருணைமேல்
உதரமுங் கருணைகங் கணவரவ முங்கருணை
உழுவையத ளுங்கருணையே
உரக்கிங் கிணிதழுவு சரணமுங் கருணைஅரு
குமையம்மை யுங்கருணைமேல்
மதலையுங் கருணைபல சிங்கஞ் சுமந்திடும்
மணிப்பீட முங் கருணைமேல்
வளரண்ட கோடிகளெ லாம்வாழ ஆரூரில்
வாழ்வதுங் கருணை. பாசம்
அதிர நட மிடும்சபை யுங்கருணை நின்கருணை
யாரறிவர் தியாகேசனே
அசைவில்கம லேசனே அசபாந டேசனே
ஆனந்த உல்லாசனே.

—ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்
[தருமை 10-வது மகா சந்நிதானம்]

22. கார்பொருவும் கருங்கூந்தல் செவ்வாய்வெண்
ணகைப்பச்சைக் கன்னி யோடும்
தார்கமழ்பூங் காந்தளந்தோட் குமரனேடும்
மணிச்சிங்கா தனத்து மேவிச்
சீர்பரவும் வான்புலவர் நினைத்தனயா
வையும் நல்கிச் சிறப்பின் வைகும்
வார்புனல்சூழ் வயற்கமலைத் தேவர்கள்சிந்
தாமணியை மனத்துள் வைப்பாம்.

## வரதாபி விநாயகர் திருமுன்னர்

23. உலகமுழு தீன்றபசுங் கன்னியிளம் பிடியினிடத்
[துதித்து வேதக்
குலவுமொளி மணிக்கூடத் துபநிடதத் தளைமருவிக்
[குடிலை என்னும்
இலகுதனிக் கம்பந்த னின்றன்பர் மனத்தண்டத்
[தினிதுலாவும்
மலர்மகளின் புறுமாரூர் வாதாபி வாரணத்தை
[வணங்கி வாழ்வாம்

## இலக்குமி திருமுன்னர்

24. தண்கமலத் திருந்தீசன் அடிக்கமலம் மனக்கமலம்
[தன்னில் வைத்து
வண்கமலைக் கண்ணனை மணவாளன் எனப்பெறுவான்
[மாதவஞ் செய்து
ஓண்கமலா லயமெனும்பே ரொளியார்ந்த திருவாரூர்க்
[குகந்தணிந்த
பெண்கமலம் கைக்கமலம் பிடித்தகொடி தனைத்தொழுது
[பெரிது வாழ்வாம்

## சுப்பிரமணியர் திருமுன்

25. பூவலர் கற்பகப் பொன்னின் மாநகர்
மேவிய தனியர சோங்க வீரைவாய்
மாவிழ வெறிந்தபோர் மதுகை வாகைவேற்
சேவகன் சேவடி சென்னி சேர்த்துவாம்.

## நவக்கிரக தேவர்களின் திருமுன்

26. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

## ஸ்ரீ துர்க்காதேவியின் திருமுன்

27. உலகினில் சத்தி பேதம் பலவுளும்
உயர்வு கொண்டே
அலகிடற் கரியஆற்றல் அடைந்தவர்க்கு
அருளும் அன்னை
மலவிருள் என்னவந்த மகிடனைச்
செற்ற செல்வி
இலகொளிக் குந்தம் ஏந்தும் இறைவியை
வணக்கம் செய்வாம்.

## சண்டேசுர நாயனார் திருமுன்

28. தாரைவெள் ளிலைவேல் மைந்தன் தன்னோடும் தலைவி
[யோடும்
வீரசிங் காதனத்து மேவினான் வாழ்விற் கெய்தச்
சீர்கெழு தேவர்க்கெல்லாம் திருமுகம் எழுதும் செம்மல்
வார்தரு கமலச் செந்தாள் மனத்தினில் வழுத்தி
[வாழ்வாம்

## அல்லியங்கோதை அம்மையின் திருமுன்னர்

29. தொல்லைமா ஞாலமாதித் தொகையிலா அண்டம் நல்கிச்
செல்வமாண் கருணையாகுஞ் சிறகால் அணைத்துப்
[போற்றும்

மல்லலஞ் செழுநீர் வாவி வண்கம லாலயத்துள்
அல்லியங் கோதைஎன்னும் அன்னத்தை அகத்துள்
[வைப்பாம்.

## கமலாம்பிகை திருமுன்னர்

30. அறந்தழையக் கலைத்தெரிவை வனப்பெய்தச்
சசியெனுமப்பேர் அரிவை வாழ
நிறங்கெழுபூ மடந்தையொடு நிலமங்கை
மங்கலத்தின் நிறைந்து மல்கப்
பிறங்குமுயிர்த் தொகையனைத்தும் களிகூரத்
தவம் புரியும் பீடு சான்ற
சிறந்தகம லாலயநா யகிசெம்பொற்
சேவடிகள் சென்னிசேர்ப்பாம்.

திருச்சிற்றம்பலம்

என்றுதுதித்து வழிபடுக.

நமச்சிவாய வாழ்க!